# ஸ்ரீ குமரகுருபரர்



பங்குனி 1 (15—3—83)

தொகுதி 5 பகுதி 6

சிவ சிவ

# 'ஸ்ரீ குமரகுருபரர்'

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

அருளாணையின் வண்ணம்

வெளிவரும் சமய - இலக்கியத் திங்கள் இதழ்.


சிறப்பாசிரியர்,

பேராசிரியர்

திரு. அ. ச. ஞானசம்பந்தன், M. A., சென்னை-83

ஆசிரியர் குழு:-

திரு. மு. அருணாசலம், M. A., திருச்சிற்றம்பலம்

திரு. கா. ம. வேங்கடராமையா, M. A., தஞ்சை

மகாவித்துவான் திரு. ச. தண்டபாணி தேசிகர், மதுரை

மகாவித்துவான்

திரு சி. அருணைவடிவேல் முதலியார், அண்ணாமலைநகர்

திரு. க. வச்சிரவேல் முதலியார், B. A., L. T., காஞ்சிபுரம்

புலவர் திரு. கீரன், லால்குடி

டாக்டர் திரு. டி. பி. சித்தலிங்கையா, M. A., Ph.D., மதுரை

திரு. கு. சுந்தரமூர்த்தி, M. A., திருப்பனந்தாள்

திரு பொ. முத்தரசு M. A., ஸ்ரீவைகுண்டம்


அட்டையில் :

ஸ்ரீ உமாபதிசிவாச்சாரியார் திருவுருவம்

பூங்கொன்றைக் கண்ணியான் பொன்மன் றிறைஞ்சிடுக
ஆங்கொன்றைக் கண்ணி யவர்.



# அருள் பழுத்த கனிச்சுவை

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர்
'கயிலைமாமுனிவர்' ஸ்ரீலஸ்ரீ காசிவாசி
முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

பண்டார மும்மணிக்கோவை 23ஆம் பாடலில் முதல் இருபத்து நான்கு அடிகளில் தம் குருநாதரின் பல்வேறு சிறப்புக்களும் புலப்படும் வண்ணம் விளிகளை அமைத்த ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் அப்பாடலின் எஞ்சிய அடிகளில் திரிகரண பிரபாவம் பேசுகிறார்.

மனம், வாக்கு, காயம் என்பன திரிகரணங்கள் எனப் பெறும். காயம் என்பது யாக்கை அல்லது உடல். மனம் நினைக்கும், வாக்குத் துதிக்கும் யாக்கை வழிபடும்.

உலகத்தில் சிற்சில நேரங்களில் சிலபல மனிதர்களின் வாக்கையும் யாக்கையின் தொழிற்பாட்டையும் வைத்து

அவர்களின் மனத்தை முற்றிலும் அளந்தறிய முடிவதில்லை, 'வஞ்சித்து ஒழுகும் மதியிலிகாள்' என்று நீதிநெறி விளக்கத்தில் பாடியருளிய ஸ்ரீ குமரகுருபர சுவாமிகட்கு இந்தப் போலிமை உலகமும் புரியும்.

எனவேதான் மனம் வாக்குக் காயம் என்ற முறையைச் சற்று மாற்றி வாக்கு மனம் காயம் என்று வைத்தார். நடுவணது எய்த இருதலையும் எய்தும் என்ற தத்துவம் இதற்கும் பொருந்தும். மனத்தின் நினைவொன்றிய வாக்கும், மனத்தின் நினைவொன்றிய தேகத்தின் தொழிற்பாடுமே சிறந்தது என்பதை இந்த வரிசை முறை உணர்த்துகின்றது. அடிகளுக்கு முன்னரும் இந்த வரிசை முறை உண்டு என்பது குறிப்பிடத்தக்கதே.

குருநாதராகிய ஸ்ரீமாசிலாமணி தேசிகர் அவர்களின் கீர்த்தியை தொடர்ந்து வாய் பேசுகிறது. அவரையே மனம் நினைக்கிறது. அவர்தம் திருவடிகளையே யாக்கை அன்புடன் இறைஞ்சுகிறது. இச்செயல்களால் திரிகரணங்களும் இன்பம் அடைகின்றன.

'வாக்கும் மனமும் யாக்கையும் ஒன்றுச்
சொல்தரு கரணம் மற்றுஇவை மூன்றும்
நின்புகழ் நவிற்றியும், நினைந்தும், நின் துணைத்தாள்
அன்புடன் இறைஞ்சியும் இனபம் உற்றனஆல்'

[ஒன்று - ஒன்றி, ஈடுபட்டு; சொல்தரு-சொல்ல உரிய; நவிற்றி - விடாமல் கூறி; துணைத்தாள் - இரண்டு திருவடி; இறைஞ்சி - துதித்து; ஆல் - அசை]

குருதேவரைப் பேசி, அவரையே நினைந்து, அவர் திருவடிகளையே பணிந்து இருப்பதால் இக்கரணங்கள் பயனற்றவை செய்யும் கரணங்களாக இவை இல்லை இவை சிவகரணங்களே.

இக்கரணங்களைச் சமஸ்கிருதத்தில் திரிகரணங்கள் என்பர். திரிகரணங்கள் என்பதற்கு மூன்று கரணங்கள் என்பது பொருளாகும். தமிழில் திரிதல் என்பது ஒன்று மற்றொன்றாக மாறுதல். கைகேயியின் மனமாற்றத்தைத் 'தேவி தூயசிந்தையும் திரிந்தது' என்றான் கவிச்சக்ரவர்த்தி கம்பன். மாறினால் முன்னைய நிலைமை மீண்டும் வரும்; திரிந்தால் முன்னைய நிலைமை மீண்டும் வராது.


அவகரணங்களானவை சிவகரணங்களாக மாறவில்லை; திரிந்தன.

'மூன்று கரணங்கள்' என்று ஒருபொருளை மட்டும் உணர்த்தும் திரிகரணங்கள் என்ற சொல் 'அவகரணம் என்பது திரிந்து சிவகரணம் ஆகியது' என்ற பொருளையும் உணர்த்துவதாக, இருபொருட் கிளவியாக ஆயிற்று என்று ஸ்ரீசுவாமிகள் நலம்படக் கூறுகின்றார்கள்.

"அவகர ணங் அல்லமற்று அம்ம
சிவகர ணங்களாய்த் திரிந்தன வன்றே
அதனால்
திரிகர ணங்கள்என்று உரைசெயும் அப்பெயர்
ஒருபொருட் கிளவிஎல் லோர்க்கும்
இருபொருட் கிளவியாய் இருந்தது இன்று எனக்கே"

[மற்று - வினைமாற்று; அம்ம, அன்று, ஏ - அசைகள்; அதனால் - ஆசிரியப்பாவின் இடையில் வந்த கூன்சொல்; ஒருபொருட் கிளவி - ஒருபொருளைத் தரும் சொல்]

—சிவ சிவ



# ஆலய பூஜை படிக்காசு நிதி

## நன்கொடையளித்த அன்பர்கள் விவரம்

1—2—83 வரை கூடுதல் ரூ 14,942-10

1. திரு. D.S. விசுவநாத கவுண்டர் தளாபட்டி ரூ 7-50
2. திரு. T.M. வெள்ளைவாரணம், பனசை. ரூ. 10-00
3. திரு. S.R வேங்கடராமா, சென்னை. ரூ. 10-00
4. திரு. அப்பு, துர்காகுடில், கும்பகோணம். ரூ. 5-00
5. திருமதி. சு. ஜெகதாம்பாள், மன்னார்குடி. ரூ. 3-00

1—3—83 வரை கூடுதல் ரூ. 14,977-60

சென்ற இதழ் இப்பட்டியலில் இராகவானந்தம் என்றிருந்ததை

திரு. இராஜரெத்தினம், சென்னை 47. ரூ. 101-00

என்றும், சுப்பிரமணிய முதலியார் என்றிருந்ததை

திரு. சுப்பையா முதலியார், பனசை ரூ. 3-00

என்றும் திருத்திப்படிக்க.

# திருப்பணி கொள்ளும் திருநாரையூர்

தென்னார்க்காடு மாவட்டம் காட்டுமன்னார்குடி வட்டம் திருநாரையூர் அருள்மிகு சுயம்பிரகாச சுவாமி ஆலயத்திருப்பணி வேலை திருப்பனந்தாள் கயிலைமாமுனிவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்கள் அருளாசியினால் துன்மதி ஸு தைமீ 30வ [12—2—82] அன்று துவக்கப்பெற்று சிதம்பரம் திரு G. வாகீசம்பிள்ளை அவர்களைத் திருப்பணிக் கமிட்டி தலைவராகக்கொண்டு நடைபெற்றுவருகின்றது. அன்பர்கள் திருப்பணிவேலைக்குத்தாராளமாக நன்கொடை அளித்து ஸ்ரீ பொல்லாப்பிள்ளையாரின் அருளுக்குப் பாத்திரராகக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

S. திருநாவுக்கரசு பிள்ளை,
பொருளாளர்,
திருப்பணிக்கமிட்டி,
9, கனகசபைநகர், சிதம்பரம்.

# சித்தாந்த சாத்திரங்கள்

மு. அருணாசலம்.

## திருக்களிற்றுப்படியார்

இதுவரையில் திருக்களிற்றுப் படியார் தோன்றிய வரலாற்றையும் அதன் சிறப்பையும் குறித்துச் சில சொற்கள் சொன்னோம். திருக்களிற்றுப்படியார் திருவுந்தியாருடைய கருத்துக்கு விளக்கம் கூறி உதாரணம் காட்டுகின்ற ஒரு சிறப்புநூல். இதுவும் அனுபூதி நூல். திருவுந்தியார் மூன்றடி, தாழிசைகளாய் உள்ள 45 பாடல்களைக் கொண்டிருக்க இந்த நூல் 100 நேரிசை வெண்பாக்களைக் கொண்டிருக்கிறது. இதற்கு ஆசிரியர் இட்ட பெயர் தெரியவில்லை. திருக்களிற்றுப் படியார் என்ற காரணப்பெயரே அமைந்து விட்டது. இந்த நூலின் 96 ஆம் பாடலில் திருவிசலூரில் வந்த சிவயோகியான ஆளுடைய தேவ நாயனார் என்பவர் இவரை மாணாக்கராகக் கொண்டு இவருக்கு பேரானந்தமாகிய சிவப் பேற்றை அளித்தார் என்று கூறியிருப்பது முன்னமே காட்டப் பெற்றது. (ஆளுடையான் எந்தரமும் ஆளுடையான்)

### 1. பழைய பொழிப்புரை

இங்கு இந்த நூலுக்கு அமைந்துள்ள பண்டை உரைகளைக் குறித்துச் சில சொற்கள் சொல்வோம். மூலப்பதிப்புக்களின் வரலாறு முன்னமே சொல்லப் பட்டது. இந்த நூலுக்குப் பண்டைய உரைகளாகக் கருதத் தக்கவை நான்கு உள்ளன. அனைத்திலும் பழமையானது ஒரு பொழிப்புரை. இதன் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. இவ்வுரையை ஏடுகளிலிருந்து பிரதி செய்து முதன் முதலாக யாம் வெளியிட்டோம். இந்த உரையை 1940இல் வெளி வந்த சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் சித்தாந்த சாத்திர உரைகளின் இரண்டாம் பதிப்பில் காணலாம். இவ்வுரை மிகவும் தெளிவான உரை. எளிமையானது. இதன் அவதாரிகையில் முதன் முதலாக உந்தி திருக்களிற்றுப்படி இரண்டின் வரலாறுகள் சொல்லப்படுகின்றன. இந்த சித்தாந்த சாத்திர உரைப்பதிப்பு முழுமையும் எமது பார்வையில் வெளி வந்த காரணத்தால், அது வரை வெளியாகாமலிருந்த இந்தப் பழைய உரையை இங்கு வெளியிடும் வாய்ப்பு எமக்குக் கிடைத்தது. இவ்வுரையாசிரியர் தமிழ்ப் புலமை மிக்கவர். சித்தாந்தப் பொருள்களில் மிக்கத் தெளிவுள்ளவர். உரை பொழிப்

புரையாயினும் பதவுரை போல ஒவ்வொரு சொல்லுக்கும் விடாமல் பொருள் எழுதிச் செல்கிறது. இந்த இயல்பைப் பார்க்கும் போது உரை அமைப்பு பண்டைய புறநானூற்று உரையை நினைவூட்டுகிறது. இவ்வுரைகாரர் ஆசாரிய மூக்தி பெற்றார் என்று சொல்ல வந்த இடத்துத் தன்னியல்பை அடைந்தர் என்று சொல்வது சிவமே ஆசாரியனுக வருகிறது என்ற கருத்தை விளக்கிக் காட்டுகிறது.

இவர் இலக்கணக் குறிப்புகளும் தருகிருர். பாடல் தோறும் தவருமல் கருத்து இன்னதென்று சிறு வாக்கியத்தால் உணர்த்துகிருர். இவற்றைப் பின்னர்த் தனியே எடுத்துக் காட்டக் கூடும். பிறர் கூறும் பொருள் பொருளல்ல என்றும் காட்டுகிருர். (61) சேந்தனுர் வரலாற்றைக் கூறுமிடத்து ஐதீகத்தால் கேட்டறிக என்பார். காரணம் சேந்தனுருடைய வரலாறு பெரிய புராணம் போன்ற வேறு எந்த நூலிலும் சொல்லப் பெறவில்லை;

திருக்களிற்றுப்படி என்ற தொடருக்கு இன்று சொல்லும் பொருள், தில்லை நடராசப் பெருமானுக்குரிய சிற்சபைக்கு ஏறும் படிகள் இருபுறமும் களிற்றின் தலை போல மத்தகமும் துதிக்கையுமாக அமைக்கப் பெற்றிருத்தலால் அப்படிகள் என்பதாகும். மற்றொரு கருத்தும் சொல்வதுண்டு களிற்றின் முதுகில் யாரேனும் ஏறி அமர விரும்பினுல், அக்களிறே மண்டியிட்டு, தன் மடித்தலைப் படியாக்கி ஏற உதவுகிறது. அது போலத் திருவருளைச் சென்று கூட விரும்புவோருக்கு அத்திருவருளே படிநெறியாக இருந்து அழைத்துச் சென்று அத்திருவருளில் கூடச் செய்கிறது. திருக்களிற்றுப்படியார் என்ற இந்த நூல் களிற்றின் முதுகில் ஏற உதவும். களிற்றின் காலாகிய படிபோல அமைந்து ஆன்மாவை முத்தி நெறியில் நடத்திச் செல்கிறது என்று பொருளாகும் என்பர் ஆன்ருேர்.

அடுத்து எழுந்த நமசிவாயத் தம்பிரான் உரையின் காலம் 1677 என்று தெரிகிறது. அந்த உரை இப்பொழிப்புரையைத் தழுவியே விளக்கியிருப்பதால் இது அதற்கு முந்திய காலத்தில் எழுதப்பட்டதென்றும் இதன் காலம் சுமார் 1575-1600 ஆகிய எல்லையாகும் என்றும் யாம் கருதுகிருேம்.

2 தில்லைச் சிற்றம்பலவர் என்னும் சிவப்பிரகாசர் செய்த உரை :

இந்த உரை 1678 என்பது வரலாறு சகம் (1600) இந்த உரையே பலரால் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. சோ. சண்முக சுந்தர முதலியார் காஞ்சி நாகலிங்க முனிவர் சைவ சித்தாந்த சமாஜத்தின் 1934 ஆம்

ஆண்டு முதற்பதிப்பு பின்னர் திருவாடுதுறை ஆதீன பதிப்புக்கள் ஆகியவை யாவும் இந்த உரையையே வெளியிட்டுள்ளன. இது மிகவும் சிறப்பான விரிவுரை. பாஷ்யம் என்றும் சொல்லலாம். இந்த உரைக்குச் சிறப்புப்பாயிரம் பின் வருவது:

சேடன்படி புரக்கும் தென்
கடலூர் உய்ய வந்தான்
பாடுங் களிற்றுப்படி தனக்கு —
நீடிமையோர்
தேடும் புகழ்ச் செஞ்சொற் சிவப்
பிரகா சன்திருந்த
நாடியுரை நாடா நயந்து.

இச்சிறப்புப்பாயிரம் 'தேடு புகழ்ச்செஞ்சொற்சிவப் பிரகாசன்' என்று மட்டும் கூறுகிறது. உந்தி களிறு இரண்டுக்கும் இவர் எழுதிய உரை மிகவும் சிறப்பானது. திருவாவடுதுறை ஆதீனத்தின் உதவியோடு மெய்கண்ட சாத்திரம் மறு பதிப்பு அச்சிட்ட காஞ்சி நாகலிங்க முனிவர், ஆதீனத்துக்கு ஏற்றம் கற்பிக்கவேண்டி, 'திருவுந்தியாருக்குத் திருவாவடுதுறை ஆதீனத்துச் சிற்றம்பலத் தம்பிரான் சுவாமிகள் உரையிட்டருளினார்' என்றும் 'திருக்களிற்றுப்படியாருக்குத் திருவாவடுதுறை ஆதீனத்துச் சிவப்பிரகாசத் தம்பிரான் சுவாமிகள் உரையிட்டருளினார்' என்றும் எழுதினார். இக்கூற்றுக்கள் சிறிதும் பொருந்தாதவை. இரண்டுக்கும் உரை எழுதியவர் ஒருவரே; அவர் திருவாவடுதுறை ஊரினராக இருக்கலாம்; தில்லையில் இருந்தார். தில்லைச் சிற்றம்பலவர் என்றும், சிவப்பிரகாசர் என்றும் வழங்கப்பட்டார். அவர் தம்பிரான் சுவாமிகளுமல்லர், ஆதீனத்தாருமல்லர்.

இத்தில்லைச் சிற்றம்பலவர் தொண்டை நாட்டில் ஆர்க்காடு என வழங்கும் நகரின் ஒருபகுதியாகப் பாலாற்றின் கரையில் உள்ள மும்பக் தொட்டி என்ற சிவத்தலத்துக்கு ஓர் உலாப் பிரபந்தம் பாடியிருக்கிறார். இங்கு சுவாமி திருநாமம் சோமநாதர், அம்பிகை சௌந்தர பாலாம்பிகை, இந்நூல் 427 கண்ணிகளை உடையது.

தில்லையினின் மேவும் சிவப்பிரகா
சன்னிலைசத்துச்
சொல்லுந் தமிழ் மாலை சூடினேன்-*148*

என்ற அடிகளால் இச்செய்தி விளங்கும். தில்லைச் சிவப்பிரகாசரே தில்லைச் சிற்றம்பலவர். இவர் இளமையில் இங்கு வாழ்ந்து இவ்வுலாப் பாடினார். பின்னர் தில்லையில் சென்று வாழ்ந்த தீட்சை உபதேசங்கள் பெற்று, தரிசன விசேஷத்தால் உந்தி களிறு இரண்டுக்கும் விரிவுரை எழுதினார் என்று கருதுகிறோம். (இவரைக் குறித்த வரலாறு சைவசித்தாந்த மகாசமாஜத்தின் பத்திரிகையான சித்தாந்தம் 1965 ஆகஸ்டு மாத இதழ் பக்கம் 227 - 230 இல் இப்பாடல் விரிவாக எழுதப் பட்டுள்ளது.)

(வளரும்)

## PRESS & REGISTRATION OF BOOKS ACT.

Registration of Newspapers (Central) Rules, 1956.

FORM IV. Sec Rule 8 R. No. 33576/78

Statement about ownership & other Particulars about SRI "KUMARAGURUPARAR" (MONTHLY)

| | | |
|---|---|---|
| 1. Place of publication | : | TIRUPPANANDAL. |
| 2. Periodicity of its publication | : | MONTHLY |
| 3. Printer's Name | : | M. MAIKANDADEVAN |
| Nationality | : | Indian |
| Address | : | Sri Kumaraguruparar Achagam<br>Sri Kasi Mutt,<br>Tiruppanandal. |
| 4. Publisher's Name | : | MA. VEA. PASUPATHY, |
| Nationality | : | Indian |
| Address | : | Sri Kasi Mutt,<br>Tiruppanandal. |
| 5. Editor's Name | : | MA. VEA. PASUPATHY, |
| Nationality | : | Indian |
| Address | : | Sri Kasi Mutt,<br>Tiruppanandal. |
| 6. Name and addresses of individuals who own the newspaper, and Partners or shareholders holding more than one percent of the total capital. | | His Holiness Sri - la - Sri<br>Kasivasi Muthukumaraswami<br>Tambiran Avl.,<br>Head of Sri Kasi Mutt,<br>Tiruppanandal. |

I, MA. VEA. Pasupathy, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Date 9—3—83

MA. VEA. PASUPATHY
Signature of Publisher

# சைவத் திருமுறைகளும் சமுதாய நெறிமுறைகளும்

பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தன்.

பழைய காலத்திலேயிருந்து சமய வரலாறு எழுதியிருக்கிறார்கள். ஆனால் இந்தச் சமயத்தாலே சமுதாயம் பெற்ற பலன் பற்றி எழுதவில்லை.

கோபாலனுடைய 'பல்லவாஸ்'; மீனாட்சியினுடைய பல்லவர் வரலாறு; பண்டாரத்தாருடைய சோழர்கள் வரலாறு; நீலகண்ட சாஸ்திரியினுடைய சோழர்கள் வரலாறு. இந்த நான்கையும் தொகுத்துப் படித்தால் தமிழ்நாட்டின் வரலாற்றைப் பற்றி ஏறத்தாழ தெரிந்து கொள்ள முடியும் எப்படி இருந்தது தமிழ்நாடு அப்போது? பல்லவர்களுடைய காலத்தில் நல்ல நிலைமைக்கு வந்தது. மிக உச்ச நிலைமைக்கு வந்தது. சோழர்களின் காலத் தொடக்கத்திலே அந்தப் பயனைச் சோழர்கள் அனுபவிக்க ஆரம்பித்தார்கள். முதன் முதலிலே சிரமப்பட்டவன் பல்லவன். நன்மைகளை ஒருமுகமாக்கச் சிரமப்பட்டவன் பல்லவன். அதனுடைய பயனை மேலும் தொகுத்து அனுபவித்தவன் சோழன். இதனால் அடிப்படைப் பயன் என்ன ஏற்பட்டதென்றால் தமிழ் மக்களைப் பொருத்தவரையில் ஒரு நல்ல சமய வாழ்க்கை. தகப்பனார் சம்பாதித்தால் பிள்ளை ஆனந்தமாக இருக்கிறான். நம் எம். எல். ஏ. செல்வாக்குள்ளவராக இருந்தால், நம் ஊருக்கு லாபம். இதெல்லாம் அனுபவத்தில் பார்ப்பதுதான். அதுபோலப் பல்லவர்களும், சோழர்களும் வலுப்பெற்றதாலே, தமிழர்களின் வாழ்க்கைத்தரம் உயர ஆரம்பித்தது. வாழ்க்கைத் தரம் உயர்ந்தது என்றால் நான் சொன்னேனே ஒரு ஆக்ஷன் இருந்தால் அதற்கு ரீஆக்ஷன் இருக்குமென்று ஒரு பக்கம் துரு பிடித்துக்கொண்டு வரும். அதைக்கவனித்து சரி செய்பவர்கள் சிலர் உண்டு.

Where wealth accumulate, men decay என்று சொன்னான் கோல்ட்ஸ்மித் எங்கே செல்வம் குவிகிறதோ அங்கே மனிதன் அழுகிவிடுகிறான் என்று. ஆக இந்த நிலையிலே தமிழ் நாட்டைப் பொருத்தமட்டிலே ஒரு சுழற்காற்று தோன்றியது;

சமயத்திலே கோளாறு இல்லை. அதை யாரும் மறுக்க முடியாது. அவர்கள், தேவாரத்தில் எள்ளி நகையாடக் கூடிய பகுதியைப் படித்தபோது எனக்கே சந்தேகம் வந்தது. அப்படியானல் இந்தச் சமணமும், இந்தப் பௌத்தமும் இறைவனுடைய திருவருள் இல்லாமல் தோன்றி இருக்க முடியுமா? எங்கோ ஒரு மனிதன் தனியாக உட்கார்ந்துகொண்டு, ஒன்றைச் சிந்தித்தான் என்ருல், ஒழிந்து போகிருன், அது அவனுடைய தனிப்பட்ட விஷயம் என்று விட்டுவிடலாம். பல்லவ சாம்ராஜ்யத்தில் தொடங்கி, கன்னியாகுமரி வரை பிடித்துவிட்டார்கள். ஐவுளிக்கடைக்கே வேலையில்லை; எல்லோரும் திகம்பரமாகி விட்டார்கள். பார்பர் ஷாப்புக்கு வேலையே இல்லை. அவ்வளவு பேரும் சமணத்திலே ஈடுபடுகிருர்கள். இப்படி ஒரு சமயம் வளர்ந்தது. அதை யாரும் மறுக்க முடியாது. இது இறைவனுடைய திருவருள் இல்லாமல் நடந்ததென்று சொன்னுல், இறைவனுடைய சர்வ வல்லமைக்கு மாசு வந்து விடும். எங்கும் நிறைந்து, முழு வல்லமை உடையதாய் இருக்கின்ற ஒரு பரம்பொருளின் சாம்ராஜ்யத்திலே, அவனையும் மீறி, இவ்வளவு பெரிய வளர்ச்சி ஏற்பட்டதென்ருல் மற்றவர்கள் செய்த தவற்றைத்தான் நீங்களும் பண்ணுவீர்கள். பிறமதத்தவர்கள் சொன்னுர்கள், "இறைவன் கருணை உடையவன்." அது உண்மை.

"ஏன் ஐயா உலகத்திலே இவ்வளவு கஷ்டம்?"

"அது தெரியாதா, அது சாத்தான் வேலை" என்று சொன்னுர்கள். வந்தது வினை. சாத்தான் என்றுசொல்லி தனிராஜ்யத்தைப் பிரித்துக்கொடுத்து The Problem of evil இது தீமையினுடைய பிரச்சினை என்று சொல்லி, அதற்குப் பதில் சொல்ல முடியாமல், கடவுளிடத்திலே அதைக்கொண்டு சேர்க்க முடியாமல், சாத்தானை அதற்கு ராஜாவாக்கியது தவறு. அதற்குள் அடுத்த கேள்வி வந்து விடும். 'யார் அந்தச் சாத்தான்'? அப்புறம் போராட்டம் நடந்தது. கடவுளுக்கும், சாத்தானுக்கும் அது சிக்-சாக் போராட்டம் மாதிரி நடந்தது. கொஞ்ச நாள் இவர் பக்கம், கொஞ்ச நாள் அவர் பக்கம் என்று போய்க்கொண்டிருந்தது. இன்றைய தினத்தைப் பொறுத்தமட்டில், நான் நினைக்கிறேன், சாத்தான் வெற்றிப் பாதையில் இருக்கிருன் என்று, அவர்களுடைய பிரச்சனை அது.

நம்முடைய சமயங்கள் ஏன் தோன்றின? தோன்றினுல் அது இறைவனுடைய திருவருள் இல்லாமல் 'தான்தோன்றித்

தனமாகத்' தோன்றி இருக்க முடியுமா? நிச்சயமாக அப்படி இருக்க முடியாது. இத்தனைப் பேரறிவு படைத்த பெரியோர்களுக்கு இந்தச் சுண்டைக்காய் சமாச்சாரம் எப்படித் தெரியாமல் போய் இருக்க முடியும். திருவருள் இல்லாமல் ஒன்றும் நடவாது என்று நினைக்கிறவர்கள், இந்த நாடு முழுவதும் பரவி இருந்த சமயம் இறைவனுடைய திருவருள் இல்லாமல் தோன்றி வளர்ந்ததென்று எப்படிச் சொல்லியிருக்க முடியும். சொல்லி இருக்க முடியாது. அப்படியானால் அடிப்படைப் புகார் வேறுஎங்கோ இருக்கிறது. இறைவன் திருவருளாலேதான் இந்தச் சமயங்கள் வளர்ந்திருக்க வேண்டும். இப்போது மிக ஆழமாகப் போகும் இந்தப் பிரச்சினை.

ஒன்றைத் தோற்றுவித்தல் இறைவனுடைய திருவருள். அது வளருகின்ற சூழ்நிலை மனிதனைப் பொருத்தது. ஒரு சின்ன உதாரணத்தின் மூலம் இதை நன்றாக விளங்கிக் கொள்ளலாம். புல் பூண்டுகள் கோடிக்கணக்கில் இருக்கின்றன. இதில் விஷத் தன்மையுடையவை; விஷத் தன்மையில்லாதவை; பயனுடையவை என்று மூன்று ரகங்கள் இருக்கின்றன. உயிரைப் போக்குகிற பல பூண்டுகள் உண்டு. பசியைப் போக்கும் புல் பூண்டுகள் உண்டு. மூன்றாவது வகுப்புப் பூண்டும் உண்டு. மனிதர்களைப் பொறுத்தமட்டில், காளானைத் தின்றுவிட்டுச் சாகிறவர்கள் மேல்நாட்டில் நிறைய பேர் உண்டு. ஆக, மனிதன்தான் என்னது என்று தெரியாமல் சாப்பிட்டுவிட்டு செத்துப் போகிறான். எந்த மிருகமாவது தவறான பூண்டைச் சாப்பிட்டுவிட்டு செத்ததென்று கேள்விப் பட்டிருக்கிறீர்களா? இல்லை. Discriminating control வேறுபாட்டினை அறிகின்ற ஆற்றல் அதற்குக் கொடுக்கவில்லை. So the responsibility ஆண்டவனிடத்தில் இருக்கிறது. இயற்கையாக, முகர்ந்து பார்த்துவிட்டு அதை தின்னக் கூடாதென்று மிருகங்கள் போய்விடுகின்றன. மாட்டுக்கும், நாய்க்கும் இந்த அறிவைக் கொடுத்த ஆண்டவன், நமக்குக் கொடுக்கக்கூடாதா? நாம் அவ்வளவு மோசமானவர்களா? ஆமாம். ஏன் தெரியுமா, மனிதனுக்கு extra ஆக discriminating power கொடுத்திருக்கிறான். ''தீது ஒரீஇ நன்றின்பால் உய்க்கின்ற அறிவு'' கொடுத்ததால் அவருக்கு responsibility over. சின்னப் பிள்ளையாக இருக்கும்போது, அம்மா, கையைப் பிடித்துக்கொண்டு, டேய், டேய், டேய், பள்ளம், பள்ளம், பார்த்துநட என்று சொல்லுவார்கள். 60 வயதானவனைக் கையைப் பிடித்துக் கொண்டு போனால் கண்பார்வை

குறைவு என்றுதான் அர்த்தம்: அவ்வளவுதான். ஆக அறிவைக் கொடுத்துவிட்ட காரணத்தால் ஆண்டவன் பொறுப்புத் தீர்ந்து விட்டது. ஆகவேதான் புல் பூண்டிலே எது நல்லது எது தீயது என்று பார்க்கிற பொறுப்பை மனிதனிடம் விட்டுவிட்டான் அதுபோல தயாமூல தர்மம் என்ற அடிப்படையிலே அனைத்து உயிர்க்கும் அருள் கொடுக்கின்ற அடிப்படையிலே தோன்றிய சமயத்திலே கோளாறு இருக்க முடியாது. ஆனால் சமயத்தில் கோளாறு இல்லை என்பது வேறு. சமயிகள் சமாச்சாரம் வேறு பெர்னாட்ஷா சொல்லுவான்,

'Darvinians are worst
Criminals
than Darvin'

டார்வினுடைய கொள்கையை உண்டாக்கிய அவனிடத்திலே குற்றம் இல்லை ஐயா, அந்தக் கொள்கையைப் பின்பற்றிய சண்டாளர்கள் பண்ணிய அட்டூழியம் இருக்கிறதே அதைத் தாங்க முடியலே. அதுபோலச் சமயத்திலே கோளாறு இல்லை. சமயிகளிடத்திலே கோளாறு வந்தது. எங்கே போராட்டம்?

''விரிவிலா அறிவினர்கள்
வேறொரு சமயஞ் செய்து
எரிவினாற் சொன்னாரேனும்
எம்பிராற் கேற்றதாகும்''

என்று பாடியவர்கள்,

''யாதொரு தெய்வம் கண்டீர்
அத் தெய்வம் ஆகி ஆங்கே
மாதொரு பாகனார்தாம் வருவர்''

என்றெல்லாம் சொன்னவர்களின் சமயப் பொது நோக்கு ஒரு புறமும், பழையபாறைப் போராட்டம் சமண பௌத்த எதிர்ப்புணர்ச்சிகள் ஒரு புறமும் வரலாறாக இருப்பது எதனால்? இது ஒரு வினா.

இது நியாயமான கேள்வி. இந்தக் கேள்வியினுடைய அடிப்படையைச் சிந்திப்போமானால், சமயத்திற்குச் சமயம் போராட்டமில்லை. இது சமயிகளுக்கும், சமயிகளுக்குமுள்ள போராட்டம். சமயிகள் மற்றொரு சமயத்தைச் சேர்ந்த சமயிகளிடத்திலே போராடுகிறார்கள். ஏன் போராடினார்கள்? தயாமூல தர்மத்தையும் அருள் அறம் பூண்ட தர்மத்தையும் கொள்கை அளவில் பேசிவிட்டு, செயல் அளவில் வாழ்க்கை வேறு ஆகிவிட்டது.

ஐர்லாந்தில் சண்டை நடந்தது. தினம் 10லிருந்து 500 வரை கொல்லப்பட்டு இருக்கிறார்கள். யாருக்கும் யாருக்கும் போராட்டம் தெரியுமா? ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தைக் காட்டு என்று சொன்ன ஒரு பெருமகனுடைய சமயத்திலே இரண்டு கட்சி அல்ஸ்டரில் இருப்பவன் பிராடஸ்

டன்ட்காரன்; ஐர்லான்டில் இருப்பவன் கத்தோலிக்கக்காரன். இவர்கள் இடையிலே தான் போராட்டம். இருபது ஆண்டுப் போராட்டம். யாரும் ஒன்றும் பண்ண முடியவில்லை. Britain is unable to quell the riot. ஏன்? அது சமயிகள் போராட்டம். இங்கே பிராடஸ்டன்டிசமோ, கத்தோலிசமோ சண்டையிடவில்லை. கத்தோலிக்சுக்கும் பிராடஸ்டன்ட்ஸ்சுக்கும் இடையே, சமயிகளிடையே உள்ள போராட்டம். அதுபோல தயாமூல தர்மத்தைப் பேசுகின்ற ஒரு சமயவாதி, அதை விட்டு விட்டு, அரசியலைப் பிடித்து, அதிகாரம் பண்ண வேண்டுமென்று நினைக்கிறான். சமயத்தைத்தான் பரப்பிவிட்டானே, பல்லவ சாம்ராஜ்யத்திலிருந்து பாண்டிய சாம்ராஜ்யம் வரை. பேசாமல் இருக்க வேண்டியதுதானே. சமயத்தைப் பரப்புகிறவன் அரசனைப் பிடிக்கிறான். ஏன்? இது நம்முடைய பழைய வரலாறு. 19 அல்லது 20– ஆம் நூற்றாண்டு இந்திய வரலாற்றைப் பார்த்தால் முதலில் சமயம் தான் வரும். அப்புறம் அரசு வரும்; அதுபோல் அவன் பண்ணினான். அப்போது சமயத்தில் அரசியல் வந்துவிட்டது. அரசியல் அடிப்படையிலேதான் இந்தப் போராட்டம் நிகழ்கிறது. இதை விளங்கிக் கொள்வோமானால் பிரச்சினை தீர்ந்துவிடும். ஏன் இவர்கள் போராட்டம் நடத்தினார்களென்றால் அரசியல் அடிப்படையிலே இந்த நாட்டைக் காப்பாற்ற வேண்டும். சமயங்களிடமிருந்து அல்ல, சமயிகளிடமிருந்து. அதை மறந்துவிடக் கூடாது.

இந்த நாட்டிலே இருக்கிறவர் 'முக்திக்கு நாயகி பெண்பிள்ளை' என்று பாடினார். அவர்கள் எல்லாம் Peter has got the key for heaven என்று சொன்னார்கள்.

சக்தியிடத்திலே எவ்வளவு ஈடுபாடு வைத்திருந்தால் "முக்திக்கு நாயகி பெண்பிள்ளை" என்று பாடுவார். யார் பாடுகிறார்? திருமூலர். அந்த அளவுக்குப் பெண்களுக்கு மதிப்புக் கொடுத்திருந்த நாட்டில், பெண்களுக்கு மோட்சமே இல்லையென்று சொல்கிற கொள்கை புகுந்தது. எனவே இது சான்றற்ற போராட்டத்தில்தான் முடிந்து தீர வேண்டும். இந்த நாட்டுப் பண்பாட்டை, இந்த நாட்டு வளர்ச்சி முறையை, இந்த நாட்டு அறிவுப் பெருக்கத்தை வளர்க்க வேண்டுமானால், தொன்று தொட்டு வருகின்ற அடிப்படையை வளர்க்க வேண்டுமானால் சமய அடிப்படையிலே வாதம் செய்திருக்கலாம். சமணர்கள் அரசியல் அடிப்படைக்குப் போய்விட்டார்கள். ஆகையால் அரசியல் அடிப்படையில்தான் சண்டை போட வேண்டும். சமணர்கள் அரசியல் அடிப்படையில் சென்றார்கள்

என்பதைச் சரித்திரத்தைப் படித்தால் தெரியும்.

சேக்கிழார் போன்ற ஒரு வரலாற்றாசிரியர் வேறு யாரும் கிடையாது. திருநாவுக்கரசர் புராணத்தில் எவ்வளவு நுணுக்கமாக அதைச் சொல்கிறார் என்பதைப் பார்க்க வேண்டும்.

இந்த அடிப்படையில், அரசியலை அரசியல் அடிப்படையில் நின்று போர் புரிய வேண்டுமென்ற முறையிலேதான் இந்தப் போராட்டம் நிகழ்ந்தது.

இனி இரண்டாவது கருத்து. சமுதாயத்தை எப்படிப் பார்க்கிறார்கள்? மோட்சம் என்பது பற்றிய பிரச்சினையே இல்லை முற்றிலும் சமுதாய அடிப்படையே. எல்லாச் சமயவாதிகளும் 'நீ முன்னேற வேண்டுமானால் இதை விட்டுவிடு' என்று சொன்னார்கள்.

those who are poor and weak for the kingdom of God belong... to them.

அது லிவிலியம். இங்கே வறுமை உடையவனாக இருக்கிறாயா, கவலைப்படாதே, இங்கே அல்லலுறுபவனாக இருக்கிறாயா, கவலைப்படாதே, ஏனென்றால் அடுத்த உலகம் உனக்காக இருக்கிறதென்ற ஒருவகையான அமைதியைத் தந்தார்கள். இந்தத் தமிழன் நினைத்தான்.

இங்கே காதை அடைத்து, மூக்கை அடைத்து, கண்ணை மூடி, காட்டிலே போய் பண்ணுகிறார்கள் தவம். ஏன் என்றால் இந்திரலோகம் கிடைக்கும்; ஊர்வசி உடைவாள் ஏந்துவாள்; திலோத்தமை செருப்பைத் தாங்குவள். அடபாவி, இவ்வுளவு பாடுபட்டு, சிரமப்பட்டுப் போவது ஊர்வசி உடைவாள் ஏந்துவதற்கு, திலோத்தமை செருப்பைத் தாங்குவதற்குமா? இதற்கா இவ்வளவு சிரமம்? இது அறியாமை. நம் சமயம்,

''மண்ணில் நல்லவண்ணம்
வாழலாம்''

என்றது. இங்கே எவ்வளவு ஜாக்கிரதையாக அந்தச் சொல்லைப் பயன்படுத்துகிறார் என்பதைப் பார்க்க வேண்டும். இந்தக் கருத்தைச் சொன்னவர்கள் கொஞ்சபேர் உண்டு. ஆனால் அவர்கள் கால எல்லை போட்டார்கள். 48 வருஷம் வரையில் ஒண்டியாயிரு; அப்புறம் கல்யாணம் பண்ணிக்கொள்; ஒரு பிள்ளையைப் பெற்றுக் கொண்ட பிறகு, அவளையும் அழைத்துக் கொண்டு காட்டுக்குப் போ; அப்புறம் அவளை விட்டுடு; நீ பாட்டுக்குப் போ என்றார்கள்.

(வளரும்)

# திருக்கணித பஞ்சாங்கம்

## தி. கி. நாராயணசாமி, கடலூர்-1

துந்துபி ஸூ பங்குனி மீ (1983 - மார்ச்மீ - ஏப்ரல்மீ)

திதி, நட்சத்திர காலம், முடியும் நேரம் (ரயில்வே மணிக்கணக்கில்)

| தமிழ்வ | ஆங்கிலவ | கிழமை | திதி | நட்சத்திரம் |
|---|---|---|---|---|
| 1 | (15—3—83) | செவ்வாய் | பிரதமை 24ம-01நி. | உத்திரட்டாதி நாள்முழுதும் |
| 2 | (16—3—83) | புதன் | துதியை 24-23 | உத்திரட்டாதி 6-57 |
| 3 | (17—3—83) | வியாழன் | திரிதியை 24-22 | ரேவதி 7-48 |
| 4 | (18—3—83) | வெள்ளி | சதுர்த்தி 23-59 | அசுவனி 8-18 |
| 5 | (19—3—83) | சனி | பஞ்சமி 23-15 | பரணி 8-27 |
| 6 | (20—3—83) | ஞாயிறு | சஷ்டி 22-11 | கார்த்திகை 8-15 |
| 7 | (21—3—83) | திங்கள் | சப்தமி 20-46 | ரோகிணி 7-44 |
| 8 | (22—3—83) | செவ்வாய் | அஷ்டமி 19-00 | மிருகசீரிஷம் 6-52<br>திருஆதிரை 29-39 |
| 9 | (23—3—83) | புதன் | நவமி 16-53 | புனர்பூசம் 28-07 |
| 10 | (24—3—83) | வியாழன் | தசமி 14-29 | பூசம் 26-19 |
| 11 | (25—3—83) | வெள்ளி | ஏகாதசி 11-49 | ஆயில்யம் 24-18 |
| 12 | (26—3—83) | சனி | துவாதசி 9-01 | மகம் 22-13 |
| 13 | (27—3—83) | ஞாயிறு | திரயோதசி 6-10<br>சதுர்த்தசி 27-26 | பூரம் 20-11 |
| 14 | (28—3—83) | திங்கள் | ○பௌர்ணமி 24-57 | உத்திரம் 18-21 |
| 15 | (29—3—83) | செவ்வாய் | பிரதமை 22-53 | அஸ்தம் 16-53 |
| 16 | (30—3—83) | புதன் | துதியை 21-23 | சித்திரை 15-57 |
| 17 | (31—3—83) | வியாழன் | திரிதியை 20-34 | சுவாதி 15-40 |
| 18 | (1—4—83) | வெள்ளி | சதுர்த்தி 20-33 | விசாகம் 15-07 |
| 19 | (2—4—83) | சனி | பஞ்சமி 21-19 | அனுஷம் 17-24 |
| 20 | (3—4—83) | ஞாயிறு | சஷ்டி 22-49 | கேட்டை 19-20 |
| 21 | (4—4—83) | திங்கள் | சப்தமி 24-56 | மூலம் 21-54 |
| 22 | (5—4—83) | செவ்வாய் | அஷ்டமி 27-25 | பூராடம் 24-52 |
| 23 | (6—4—83) | புதன் | நவமி நாள் முழுவதும் | உத்திராடம் 27-57 |
| 24 | (7—4—83) | வியாழன் | நவமி 6-00 | திருஓணம் நாள் முழுதும் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 25 | ( 8—4—83) | வெள்ளி | தசமி | 8-28 | திருஓணம் | 6-55 |
| 26 | ( 9—4—83) | சனி | ஏகாதசி | 10-34 | அவிட்டம் | 9-34 |
| 27 | (10—4—83) | ஞாயிறு | துவாதசி | 12-09 | சதயம் | 11-14 |
| 28 | (11—4—83) | திங்கள் | திரயோதசி | 13-03 | பூரட்டாதி | 13-21 |
| 29 | (12—4—83) | செவ்வாய் | சதுர்த்தசி | 13-35 | உத்திரட்டாதி | 14 23 |
| 30 | (13—4—83) | புதன் | ● அமாவாசை | 13-28 | ரேவதி | 14-54 |
| சித்திரை | | | | | | |
| 1 | (14—4—83) | வியாழன் | பிரதமை | 12-53 | அசுவனி | 14·56 |

விளக்கம் : திதி, நட்சத்திரம், யோகம் இம்மூன்றின் முடியும் நேரமும், விலக்கப்பட்ட தியாஜ்ய தொடக்க காலமும் பஞ்சாங்கங்களில் கொடுப்பது முறை. நடு இரவு0மணி முதல் மறுநாள் நடுஇரவு வரை, 24 மணியாக ரயில்வே மணியைக் கணக்கிடுகிறோம். பஞ்சாங்கத்தில் சூரிய உதயம் முதல் மறுநாள் சூரிய உதயம் வரை ஒருநாளாக கணக்கிடுவதால், இரவுமணி 12 (ரயில்வே மணி0க்கு மேல் சூரிய உதயம் வரை உள்ள 6மணி நேரங்களை (தெளிவாக உணரும் பொருட்டு) 24 மணியுடன் கூட்டிக் கொடுப்பது அனைத்து முறைகளுக்கும் பயன்படக்கூடியது. அதன்படி இங்கு மணி கூடிக் கொடுத்திருக்கியது. இங்கு அச்சிட்ட மணி நேரங்கள் இந்தியா, இலங்கை முழுவதற்கும் அப்படியே பயன்படுத்திக் கொள்ளலாம்.

# இதமான வாழ்வுக்கு எளியவழிகள்

### கரப்பான் பிணி அகல

1. கருவேலமரத்தின் வேரைக் கஷாயம் செய்து பருக கரப்பான் பிணி நீங்கும்.

### தாதுவிருத்திக்கு

2. கறந்த பசும் பாலில் கலப்பில்லாத புதுத் தேன் கலந்து பருகிவர தாது விருத்தி உண்டாகும்.

### உடல் அனல் தணிய

3 நாட்டு வெங்காயத்தை நெய் விட்டு வதக்கி உண்ண உஷ்ணம் குறையும்

Dr. N. சடையப்பன், S M. P

# பாரதியார் பாடலுள் ஒன்று

அடிகளாசிரியர் தஞ்சாவூர்.

தோற்றுவாய்

பாரதியார் புதுவை நகரத்தில் தங்கியிருந்த பொழுது அவர் மனம் அமைதியை விரும்பும். அதற்காக அவர் நகரத்திற்கு வெளியே சென்று உலாவியும் தங்கியும் பலவகை இயற்கைக் காட்சி முதலியவற்றைக் கண்டு வருவார்.

உலக மக்கள் இக்காலத்தில் திரைப்படக் காட்சியைக் கண்டு களிப்பதற்கு ஓடுவதைப் போல இவர் அமைதிதராத புதுவை நகரத்தை விட்டு அதற்குப் புறம்பேயுள்ள சாலை, சோலை, வயற் புறம், கடற்புறம் முதலிய இவ் இடங்கட்குச் சென்று அங்குள்ள இயற்கைக் காட்சி முதலானவற்றைக் கண்டு அமைதி பெற்று அகமகிழ்ச்சியடைவார். அவர் அவ்விடங்களில் கண்ட காட்சியிலிருந்து தாம் பாடுகின்ற பாட்டிற்கேற்ற பாடுபொருளாகிய உரிப் பொருள்களைப் பெற்றுக்கொண்டு அப்பொருளைப் பாடலில் அழகாக அமைத்துக்கொள்வார்.

அவர்கண்ட தீபவொளி

புதுவை நகரத்தை அடுத்த கிராமப் பகுதியொன்றில் தென்னை மரச் சோலைக்குள் சித்தாந்த சாமி திருக்கோயில் என்பது இருக் கின்றது. பாரதியார் அங்கு அடிக்கடி சென்று தங்குவார். அத் திருக்கோயில் வாயிலில் இரவு பகல் எந்த நேரத்திலும் எரிந்து கொண்டிருக்கும்படி நந்தா விளக்கொன்று வைக்கப்பட்டிருந்தது. பாரதியார் அத்தீபவொளி உலகமக்களுக்கு நல்ல கருத்துக்களை உணர்த்துவதாகக் கருதினர். அக் கருத்தினைச்

'சித்தாந்த சாமி திருக்கோயில் வாயில் தீபவொளி'

என்ற தலைப்பில் பாட்டாக எழுதினர். மேற்கண்ட தலைப்பில் இருக்க வேண்டிய பாட்டு இப்பொழுது 'சித்தாந்த சாமி கோயில்' என்ற தலைப்பில் உள்ளது.

இப்பொழுதுள்ள பாடம்:

பாரதியார் பாடல்களைத் திரட்டிப் பெரிதும் சிறிதுமாகப் பல வடிவத்தில் பல பதிப்புகள் இதுவரை வெளியாகியுள்ளன. அப்பதிப்புக்

களெல்லாம் திருத்தமான ஆராய்ச்சிப் பதிப்பாக இல்லை என்பது என் கருத்தாகும். அங்கங்கே களையவேண்டிய பல பிழைகள் உள்ளன; அவையெல்லாம் திருந்த வேண்டும். எடுத்துக் காட்டாக 'சித்தாந்த சாமி திருக்கோயில்' என்ற தலைப்பில் உள்ள பாடலைப் பார்ப்போம். அப்பாட்டினைப் படித்துப் பார்த்தால்

''சித்தாந்த சாமி திருக்கோயில் வாயில் தீப வொளி''

என்ற தலைப்பில் அப் பாடலின் தலைப்பு இருக்கவேண்டும். அப் பாடலின் இப்பொழுதுள்ள வடிவம்

1. ''சித்தாந்தச் சாமி திருக்கோயில் வாயிலில்
தீப வொளியுண்டாம் - பெண்ணே
முத்தாந்த வீதி முழுதையும் காட்டிட
மூண்ட திருச்சுடராம் - பெண்ணே

2. உள்ளத் தழுக்கும் உடலிற் குறைகளும்
ஓட்ட வருஞ்சுடராம் - பெண்ணே
உள்ளத் தனங்கள் அனைத்தும் வெளிப்படக்
காட்ட வருஞ்சுடராம் -பெண்ணே

3. தோன்று முயிர்கள் அனைத்தும்நன் றென்பது
தோற்ற முறுஞ்சுடராம் – பெண்ணே
மூன்று வகைப்படும் காலம்நன் றென்பதை
முன்ன ரிடுஞ்சுடராம் - பெண்ணே

4. பட்டினந் தன்னிலும் பாக்கநன் றென்பதைப்
பார்க்க வொளிர்சுடராம் - பெண்ணே
கட்டு மனையிலுங் கோயில்நன் றென்பதைக்
காண வொளிர்சுடராம் – பெண்ணே.''

என்பதாகும். இப்பாடலில் கீழ்க்கோடிட்ட இடங்களெல்லாம் திருந்தவேண்டிய இடங்களாகும். மேலும் பாட்டின் அமைப்பையே மாற்றி அமைக்க வேண்டும்.

அறிஞர் நன்கு கருதுக:

(அ) முன்னர் இப்பாட்டின் தலைப்பு,

''சித்தாந்த சாமி திருக்கோயில் வாயில் தீபவொளி''

என்றிருக்க வேண்டும்.

(ஆ) பாரதியார் அத்தீபவொளி நமக்குப் பல உண்மைகளைக் காட்டுகின்றது என்று தொடங்கி, அவ்வொளி காட்டுவனவற்றைக் குறித்துப் பாடுகிறார்.

(இ) 'சொல் முடிவு' என்பது எல்லா அறிஞர்களுக்கும் உரிய பொது இலக்கணமாகும். அம்முடிவில் மாறுபட்டு அறிஞர் பாட்டு இசைப்பதில்லை.

(ஈ) சித்தாந்த சாமி திருக்கோயில் வாயிலில் தீபவொளியுண் டாம்; அது முத்தாந்த வீதி முழுதையும் காட்டிட மூண்ட திருச்சுட ராம் பெண்ணே!'' என்று, பாரதியார் பாட்டைத் தொடங்குகிறார்.

(உ) தொடங்கியவர் 'உள்ளத்து அழுக்கினையும் உடலிற் குறை களையும் ஒட்ட வரும் சுடராம்' என்றும் 'கள்ளத் தனங்கள் அனைத்தும் வெளிப்படக் காட்ட வரும் சுடராம்' என்றும் பாடுகிறார்.

(ஊ) மேற்காட்டிய தொடர்களில் ஒட்ட வரும், காட்ட வரும் என்பன வினையெச்சந் தொடர்ந்த பெயரெச்சமாய்ச் சுடர் என்ற பெயருடன் முடிந்து நிற்கின்றன. ஏனைய கண்ணிகளும் இவ்வாறே முடிந்து நிற்கவேண்டும்.

(எ) மேற்காட்டிய முறையில் அடுத்த கண்ணி

''தோன்று முயிர்கள் அனைத்தும்நன் றென்பதைத்
தோற்ற உறுஞ்சுடராம் பெண்ணே!
மூன்று வகைப்படும் காலம்நன் றென்பதை
முன்ன இடுஞ்சுடராம் பெண்ணே''.

என்ற பாடத்தில் இருத்தல் வேண்டும். அவ்வாறிருப்பின் தோற்ற உறும், முன்ன இடும் என்று வினையெச்சந்தொடர்ந்த பெயரெச்ச மாய்ச் சுடர் என்னும் பெயருடன் முடியும்.

ஏ. அடுத்த கண்ணி ''பட்டினந் தன்னிலும் பாக்கநன்று'' என்ற பாடத்தில் இப்பொழுதுள்ள தொடர் ''கருப்பனில் பொன்னன் நல்லன்'' என்றாற்போல 'பட்டினந் தன்னிலும் பாக்கம் நன்று'' என்று இருத்தல் வேண்டும். பட்டினம் என்பது கடற்கரை நகர மாகும். பாக்கம் என்பது கடற்கரைக் கிராமமாகும். நகரத்தைக் காட்டிலும் கிராமம் நன்று என்பதையே பாரதியார் கருதியுள்ளார்.

ஐ. இப்பாடலை இயற்றமிழாகக் கருதினால் பெண்ணே என்ற விளிக்கு மூண்ட திருச்சுடராம் என்பன போன்ற சொற்களை முடி பாகக் கூட்டலாம். ஆனால் இசைத்தமிழிலே பெண்ணே என்ற விளிக்கு மூண்ட திருச்சுடராம் முதலிய சொற்களை மற்றொரு முறை திருப்பிச் சொன்னாற்றான் இசைமுடிவு பெறும். இவ்வாறு முடிதலை இப்பாட் டினைப் போன்ற குதம்பைச் சித்தர் பாட்டாலும், இராமலிங்க சுவாமிகளுடைய

''ஆணிப்பொன் அம்பலத் தேகண்ட காட்சிகள்
அற்புதக் காட்சியடி -அம்மா
அற்புதக் காட்சியடி'' —என்னும் பாட்டாலும்

உணர்ந்து கொள்ளலாம். குதம்பைச் சித்தர் பாடலில் பல்லவியில் லை. இராமலிங்க சுவாமி பாடலில் பல்லவியும் சரணங்களும் உள்ளன.

ஒ. மேற்கூறியவற்றையெல்லாம் கருதினுல் பாரதியார் பாட்டு கீழ்க்கண்ட வடிவத்தில் அமைய வேண்டும்;

''சித்தாந்த சாமி திருக்கோயில் வாயில் தீபவொளி''

1; சித்தாந்த சாமி திருக்கோயில் வாயிலில்
தீப வொளியுண்டாம் பெண்ணே!
தீப வொளியுண்டாம்
முத்தாந்த வீதி முழுதையும் காட்டிட
மூண்ட திருச்சுடராம் பெண்ணே!
மூண்ட திருச்சுடராம்;

2; உள்ளத் தழுக்கும் உடலிற் குறைகளும்
ஓட்ட வருஞ் சுடராம் பெண்ணே!
ஓட்ட வருஞ்சுடராம்:
கள்ளத் தனங்கள் அனைத்தும் வெளிப்படக்
காட்ட வருஞ்சுடராம் பெண்ணே!
காட்ட வருஞ்சுடராம்.

3. தோன்று முயிர்கள் அனைத்தும்நன் றென்பதைத்
தோற்ற உறுஞ்சுடராம்-பெண்ணே!
தோற்ற உறுஞ்சுடராம்
மூன்று வகைப்படும் காலம்நன் றென்பதை
முன்ன இடுஞ்சுடராம்-பெண்ணே
முன்ன இடுஞ்சுடராம்;

4; பட்டினந் தன்னிலும் பாக்கம்நன் றென்பதைப்
பார்க்க ஒளிர்சுடராம்-பெண்ணே!
பார்க்க ஒளிர் சுடராம்
கட்டு மனையிலும் கோயில்நன் றென்பதைக்
காண ஒளிர்சுடராம்-பெண்ணே
காண ஒளிர் சுடராம்''

இப்பாடலைப் பற்றிய சில குறிப்புகள்:

1. தொல்காப்பியம் புறத்திணையியலில் பாடாண் திணையில் வேலின் ஒக்கிய விளக்கு நிலை என்றொரு துறை உண்டு. அத் துறைவகையைச் சார்ந்தது இப்பாடல்.

2. புறப்பொருள் வெண்பாமாலையில் பாடாண் படலத்துள் கூறப்பட்ட விளக்குநிலை என்ற துறை
''அளப்பருங் கடற்றானையான்
விளக்குநிலை விரித்துரைத்தன்று'' என்றும்
''அடரவிர் பைம்பூண் வேந்தன் றன்னைச்
சுடரொடு பொருவினு மத்துறை யாகும்'' என்றும்
இரண்டு விதமாக வரும் என்பர்.

3. பாரதியார் கூறும் இவ் விளக்குநிலைப் பாடல்கள் மக்களுக்குப் பல உண்மைப் பொருளை உணர்த்துகின்றன

4. உமாபதி சிவம் என்னும் ஞானாசிரியர் உயிர்கள் உலகப் பொருள்களை அறிவதற்கு இறைவன் அறிவு உபகாரப்பட்டு அறிவித்து நிற்கும் நிலையை உணர்த்த, கண் ஒளியையும் விளக்கின் சோதி யையும் உவமையாகக் கூறியுள்ளார். கண்ணொளி பொருள்களைக் காண வேண்டின் விளக்கொளி முற்பட இருந்து காட்டவேண்டும்; அஃதேபோல் உயிர் உணர்வதற்கு இறைவன் உணர்வு முற்பட இருந்து காட்டவேண்டும் என்பர்.

5. பாரதியார் அம்முறையைப் போல் சித்தாந்த சாமி திருக் கோயில் வாயில் தீப வொளி நமக்குப் பல உண்மைகளைக் காட்டு கின்றது என்று பாடுகின்றார்:

அப்பாட்டு உணர்த்தும் உண்மைகளிற் சில :-

1. சித்தாந்த சாமி திருக்கோயிலில் நந்தா விளக்கு வைக்கப் பட்டிருந்து; அது முன்னர் (இறப்பில்) எரிந்தது; இப்பொழுது (நிகழ்வில்) எரிந்துகொண்டிருக்கிறது; பிற்காலத்தும் (எதிர்வில்) எரியும். இவற்றைக் கருத்தில் வைத்துக்கொண்டு மூன்று வகைப் படும் காலம் நன்று என்பதை முன்ன இடும் சுடராம் என்பர். இது ''சென்ற காலத்தின் பழுதிலாத் திறமும் இனியெதிர் காலத்தின் சிறப்பும்; இன்றெழுந் தருளப் பெற்றபேறதனால் எற்றைக்குந் திருவரு ளுடையேம்'' என்ற சேக்கிழார் திருவாக்கை நினைவுபடுத்து கிறது.

2. நாட்டுப்புறத்தில் வாழும் மக்களிற் பலர் நகர வாழ்வின் பகட்டில் மயங்கி நகரத்திற் குடியேறுகின்றனர். அங்ஙனம் குடியேறின் நாட்டின் முக்கியத் தொழிலாகிய உழவுத் தொழில் சிதைவுபெறும். சிதைவுபெற்றால் உணவிற்குத் திண்டாட வேண்டுப.

''நாட்டுப்புறத் தார்களெல்லாம் நஞ்சைபுஞ்சை வேலைவிட்டுப்
கோட்டுப் போட்டு நகரங்களில் குடியேறி வாழ்க்கை செய்தால்
உழவு எப்படி ஓங்கும் — நாட்டில்
வறுமை எப்படி நீங்கும்?''

என்பது என்னுடைய பாட்டாகும்.

எனவே நாட்டுப்புறத்தில் வாழ்பவர் நகரத்தை நோக்கி ஓடுவதும் நகரத்தில் வாழ்பவர் நாட்டுப்புறத்திற் சென்று குடியிருக்கச் சிணுங்குவதும் நாட்டின் நல்ல நிலையைக் கெடுத்து விடும் என்பதை அறிஞர் கருத வேண்டும்.

திருப்போரூர் தவத்திரு சிதம்பர சுவாமிகள் சென்னைப் பட்டின வாசத்தைவிட முருகன் வாழும் திருப்போரூர் கிராம வாசமே சுகத்தைத் தரும் என்னும் கருத்தினை,

''அளகா புரியன்ன பட்டினத் தேசுதை யால்வனைந்த
களவார் முகில்படி மாடத்தி னூடு களித்தலினும்
புளகா டவியெழ மெய்ப்போரி வேலவனைப் டோற்றியுய்வார்
வளவார் புறந்திண்ணை வைகுதல் ஏதமில் மாசுகமே''
(திருப்போரூர் சந்நிதிமுறை)

என்று கூறியுள்ளனர்.

நாட்டிற்கு நல்லன கூறும் பாரதியாரவர்கள்

'பட்டினந் தன்னிலும் பாக்கம் நன்றென்பதைப்
பார்க்க ஒளிர்சுடராம் — பெண்ணே
பார்க்க ஒளிர்சுடராம்'

ன்று பாடுகிறார். பாரதியார் பாட்டைப் படிப்பவர்கள் அவர் கூறும் அரிய கருத்தின் உண்மையை உணர்ந்து பட்டினமாகிய நகரத்தில் வாழ்வதைவிடப் பாக்கமாகிய கிராம வாசமே சிறந்தது என்பதைப் பின்பற்ற வேண்டும். அரசியலாரும் கிராமங்களை வாழ்வதற்குத் தகுதியாக மாற்றி அமைக்க வேண்டும்.

பாரதியார் இதனை அடுத்து மற்றொரு கருத்தினையும் கூறுகிறார்.

''கட்டும் மனையிலும் கோயில்நன் றென்பதைக்
காண ஒளிர்சுடராம் — பெண்ணே;
காண ஒளிர்சுடராம்''

என்பது அக்கருத்தமைந்த பாடலாகும்:

தனி மனிதன் ஒருவனுக்காகக் கட்டப்படும் வீட்டினைக் காட்டிலும் பொது மக்கள் பலர்க்கும் பயன்படுமாறு அமைக்கப் படும் கோயில் நலம் விளக்கும் என்னும் உண்மையைக் காண்பதற்கு ஒளிரும் சுடராக உள்ளது அத்தீப வொளி என்பது அப்பாட்டின் கருத்தாகும்.

தனி மனிதன் கட்டிக்கொள்ளும் வீடு பெரும்பாலும் தன்னலம் வளர்வதற்கே இடமாக இருக்கின்றது. கோயில் பல பொது மக்களுக்குப் பயன்பட்டுப் பொதுநலம் வளர்வதற்கு இடமாக உள்ளது. அதனுல் ''கட்டும் மனையிலும் கோயில் நன்று'' என்று பாரதியார் கருதுகின்ருர்.

முடிப்புரை :- பாரதியார் பாடல்கள் நல்ல முறையில் ஆராயப் பட்டு அவர்தம் சிறந்த கருத்துக்கள் உலகமெங்கும் பரவ வழிசெய்ய வேண்டும் என்பதை முடிவுரையாகக் கூறுகின்றேன்.


one No: 222 | Tel. Add. ''JEWELLERY
T. N. G. S. T. No. 209126. | Post Box No. 14
L. No. 8/77. | Residence Phone No: 622

தரம் மிக்க தங்க நகைகளுக்கு

நடராஜ விலாஸ்

ஜுவல்லரி ஹால்

சிதம்பரம்

முகவரி

செ. ரெத்தினசாமி செட்டியார் சன்ஸ்,

உரிமையாளர்கள் :

நடராஜ விலாஸ் ஜுவல்லரி ஹால்

26, 27, 28, கடைத்தெரு, சிதம்பரம்.

தென்ஞர்க்காடு மாவட்டம் — 608 001.

# ஸ்ரீ காசிமடத்தின் புதிய வெளியீடுகள்

| | | | | |
|---|---|---|---|---|
| திருவருட்பயன் | (விளக்க உரையுடன்) | விலை | ரூ. | 1–50 |
| நீதிநெறிவிளக்கம் | ,, | விலை | ரூ. | 1–50 |
| உண்மைநெறி விளக்கம் | ,, | விலை | ரூ. | 0-75 |
| கந்தர்கலி வெண்பா | ,, | விலை | ரூ. | 1-50 |
| உண்மை விளக்கம் | ,, | விலை | ரூ. | 1-00 |
| திருவுந்தியார் | ,, | விலை | ரூ. | 1-25 |
| கொடிக்கவியும் வினவெண்பாவும் | ,, | விலை | ரூ. | 0 75 |
| திருக்களிற்றுப்படியார் | ,, | விலை | ரூ. | 1-50 |
| இருபா இருபஃது | ,, | விலை | ரூ. | 1-25 |
| போற்றிப் பஃறொடை | ,, | விலை | ரூ. | 1-25 |
| நெஞ்சுவிடு தூது | ,, | விலை | ரூ | 1-50 |
| திருக்குறள் ஒரு பொதுமறை | | விலை | ரூ. | 3-00 |
| மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்-கருத்தரங்கக் கட்டுரைகள் | | விலை | ரூ. | 3-00 |
| திருவாசகம்-ஆங்கில மொழிபெயர்ப்பு (கோ. வன்மீகநாதன்) | | விலை | ரூ. | 15-00 |
| திருவருட்பயன்-நிரம்ப அழகிய தேசிகர் உரையுடன் | | | ரூ. | 5-00 |
| அபிராமி அந்தாதி தெளிவுரையுடன் | | விலை | ரூ. | 1-00 |
| திருவிளையாடற்புராணம் | (உரைநடை மதுரைக்காண்டம்) | விலை | ரூ. | 4-00 |
| திருவிளையாடற்புராணம் | (உரைநடை கூடற்காண்டம்) | விலை | ரூ. | 3-50 |
| திருமுறைகண்ட புராணம் | சேக்கிழார் புராணம் | விலை | ரூ. | 0-75 |
| திருத்தொண்டர் புராணம் | (மூலம்) | விலை | ரூ. | 12-00 |
| திருத்தொண்டர்புராணம் | (உரைநடை) | விலை | ரூ | 12-00 |
| Peeps in to the Caltural Heritage of Hinduism (M. ARUNACHALAM.) | | விலை | ரூ, | 25-00 |
| கந்தபுராணம் மூலம் 2ம் பகுதி | (பழையபதிப்பு) | விலை | ரூ. | 4-00 |
| திருவுந்தியாரும் திருக்களிற்றுப்படியாரும் (திருமுறைக் கலைஞர் க. வெள்ளைவாரணனார்) | | விலை | ரூ | 3-25 |

விற்பனையாளர்களுக்கு 20% கழிவு உண்டு.

ரூ: 1000/க்கு மேற்பட்ட ஆர்டர்களுக்கு அனுப்புகைச்செலவு இலவசம்.

முகவரி;- மேலாளர்:

ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள் 612504

(தஞ்சை மாவட்டம்)

# நக்கீரரின் சொல்லாக்க நலம்

ந. ரா. முருகவேள், M. A., M. O. L.,

கவிஞர்களும் புலவர்களும், ஒரு மொழியின் சொற்களையே கருவிகளாகக் கொண்டு, தத்தம் கலைத் திறத்தின் எழில்நலம் காட்டிக் களிப்புறுத்துவர். சொற்களைத் திறன் தெரிந்து கையாளும் அரும்பெரும் திறமையைக் கொண்டே, கவிஞர்கள் அல்லது புலவர்களின் அருமையும் பெருமையும் அளந்து மதிப்பிடப்பெறும். நக்கீரர் என்னும் பெயரில், ந - சிறப் புணர்த்தும் ஓர் இடைச்சொல்: கீர் - சொல், சொல்வன்மை. நக்கீரர் என்னும் பெயர்ச் சொல்லுக்குச் ''சிறந்த சொல் வன்மை உடையவர்'' என்பது பொருள். அதற்கு ஏற்ப, நக்கீரர் பலப்பல புதிய அரிய சொல்லாக் கங்களைப் படைத்து, அழகிய கவிதை இயற்றும் கலையாற்றல் மிக்கவர் என்பதனை அப்புலவர் பெருந்தகை பாடியருளிய திருமுருகாற்றுப்படையில் வருகின்ற பல சான்றுகள், புலப்படுத்து கின்றன.

மாற்று உயர்ந்து விளங்கும் தூய சிறந்த பொன்னானது, ஆடகம் சாதரூபம் கிளிச்சிறை சாம்பூநதம் என்று நான்கு வகைப்படும். இவற்றுள்ளும் சாம்பூநதம் என்னும் பொன்னே மிகவும் சிறந்துயர்ந்தது என்பர். திருப்பரங்குன்றம் ஆகிய மலை நிலத்துச் சூரர மகளிர், சாம்பூநதம் என்னும் உயர்ந்த சிறந்த பொன்னால் இயன்ற அழகிய இழைகளை அணிந் துள்ளனர், அதனைக் குறிப்பிட வரும் நக்கீரர், சாம்பூநதம் என்னும் சொல் வடசொல் ஆதலின், அதனை அங்ஙனமே தமது தெய்விகக் கவிதையில் அமைக்க விரும்பிற்றிலர்.

'சம்பு' என்னும் சொல்லுக்கு நாவற்பழம், நாவல்மரம் என்பது பொருள். அந்த நாவல் மரங்கள் நிறைந்திருப்பது சம்புத் தீவம். அதன்கண், 'நாவல்மரப் பழங்களின் சாறு படிந்து அதனால் விளைந்த பொன் என்பது, சாம்பூநதம் என்னும் வடசொல்லுக்கு உரிய பொருள்: ஆதலின் அக்கருத்தினைக் குறிக்கும் வகையில், அதனைத் தமிழாக்கம் செய்து, ''நாவலொடு பெயரிய பொலம் புனை அவிர் இழை'' என்னும் தொடரினை, அழகுற அமைத்து வழங்கியருள் கின்றார், ஆசிரியர் நக்கீரர்

பெருமான்: இந்தப் புதிய சொல்லாக்கத் தொடர், நக்கீரர் பெருந்தகையின் நல்ல தமிழுணர்வைத் தெள்ளிதின் விளக்குவதாகும்:

''கைபுனைந்து இயற்றாக்
கவின்பெறு வனப்பின்
நாவலொடு பெயரிய பொலம்புனை
அவிர் இழை''

என்பன, திருமுருகாற்றுப் படையின்கண் வருகின்ற சிறந்த அழகிய இனிய வரிகளாகும்!

நக்கீரர் பெருமான் நயம்மிகப் படைத்த, இந்த நல்ல சொல்லாக்க முறையினை வியந்து உவந்து, பின்வந்த சான்றோர்கள் பலரும், இம்முறையினைப் பெரிதும் தழுவிப் போற்றியுள்ளனர். இங்குச் சிறப்பாக ஒன்றை மட்டும் குறிப்பிடுதல் அமையும். பாரதக் கதையில் போதருகின்ற 'திருதராட்டிரன்' என்னும் அரசனைப் பற்றிய குறிப்பொன்று, சங்ககால நூலாகிய கலித்தொகைப் பாடல் ஒன்றில் வருகின்றது. திருதராட்டிரன் என்னும் சொல், தமிழ்மொழியின் இயல்பிற்கு ஏற்ற சொல்லமைப்பு உடையதன்று. ஆதலின், அதனை அங்ஙனமே குறிப்பிட விரும்பாமல், பாலை பாடிய பெருங்கடுங்கோ என்னும் சங்க காலப் புலவர், அதனைப் பின் வருமாறு குறிப்பிடுகின்றார்:

திருதராட்டிரன் கண்பார்வை அற்றவன்; பிறவியிலேயே குருடன். அவனைப் பிறர் பார்த்தல் இயலுமேயன்றி அவன் பிறரைப்பார்த்தல் இயலாது. அவனது நிலை கண்ணாடியைப் போன்றது. கண்ணாடியை நாம் பார்க்கலாம். ஆனால் கண்ணாடியால் நம்மைப் பார்க்க முடியாது. இத்தகைய கண்ணாடியைப் போன்ற இயல்புடையவன் ஆதலின், திருதராட்டிரனுக்குத் 'தர்ப்பண ஆனனன்' — 'முகுர ஆனனன்', (தர்ப்பணம், முகுரம் – கண்ணாடி; ஆனனம் – முகம்) எனப்பெயர்கள் வழங்கும். அது பற்றி அவனை 'வயக்குறு மண்டிலத்து வடமொழிப் பெயர்பெற்ற முகத்தவன்'' என்று, பாலை பாடிய பெருங்கடுங்கோ, தமது கலித்தொகைப் பாடல் ஒன்றில் குறிப்பிட்டருள்கின்றார்.

''வயக்குறு மணடிலம்'' என்பது, கண்ணாடியைக் குறிக்கும். அங்ஙனம் குறிக்குங்கால், அதற்கு 'ஒளி மிகுந்த வட்ட வடிவம் உடையது' என்பது, பொருள்! அத் தொடருக்குச் சூரியன் என்றும் பொருள் கொள்ளலாம். அங்ஙனம் கொள்ளுங்கால் 'பொருள்களை விளங்கச் செய்கின்ற, கதிர்கள் மிகுந்த, ஒளி வட்டம்' என்று பொருள்படும். அப்பொருளில் அத்தொடர் சூரியனையும் குறிக்கும். சூரியர்கள் பனிருவரில், பகன் என்னும் சூரியன், தக்கனின்

வேள்வியில், வீரபத்திரரால் ஒறுக்கப்பெற்றுக் கண்குருடாயி னுன் என்பது புராண வரலாறு.

'உண்ணப் புகுந்த பகன் ஒளித்து
ஓடாமே,
கண்ணைப் பறித்தவாறு உந்தீபற;
கருக்கெட நாம்எலாம் உந்தீபற''

என்பது திருவாசகம். அதனைத் தழுவி 'வயக்குறு மண்டிலம்' என்னும் தொடர் 'பகன் என்னும் கண் பார்வை இழந்த சூரியனையும் குறிப்பதாகக் கொள்ளலாம். கொள்ளிள் பகன் என்னும் சூரியனைப் போலக் கண்பார்வை இழந்தவனுகிய திருதராட்டிரன் எனப் பொருள் உணர்த்தும்.

சாம்பூநதம் என்னும் பொன்னை 'நாவலொடு பெயரிய பொலம்' என்று நக்கீரர் வழங்கியதைத் தழுவியே திருத ராட்டிரனை 'வயக்குறு மண்டிலத்து வடமொழிப் பெயர்பெற்ற முகத்தவன்' என்று, பாலை பாடிய பெருங்கடுங்கோ பாடி அருளினராதல் வேண்டும்.

இச்சொல்லாக்க முறையினைத் தழுவி மாணிக்கவாசகர் 'நரசிங்கம்' என்பதைத் திருக்கோவையாரில் 'ஆள்அரி' என்றும் திருத்தக்கதேவர் சீவகசிந்தாமணியில் 'புத்திசேனன் என்பவனைத் 'திங்கள் விரவிய பெயரினுன்' என்றும்; கம்பர் அசகாய சூரன் என்பவனைக் 'கூட்டு ஒருவரை வேண்டாக் கொற்றவன்' என்றும்; ஆங்காங்குத் தம் நூல்களில் அழகுறக் குறிப்பிட்டருள்வார் ஆயினர். சூரியநாராயண சாத்திரியார் தம்மைப் 'பரிதிமாற் கலைஞன்' என்றும், சுவாமி வேதாசலம் அவர்கள் தம்மை 'மறைமலை அடிகள்' என்றும், அட்டாவதானம் கலியாணசுந்தர யதந்தீரர் தம்மை 'மணவழகு' என்றும் குறிப்பிட்டுக் கொண்டாற் போல்வன நக்கீரரின் சொல்லாக்க நல முறையைத் தழுவியனவேயாகும் எனலாம். ஆசிரியர் மறைமலையடிகளார் Tennyson என்பதனைத் தேனிசையன் என்றும், Shakespeare என்பதனைச் செகப்பிரியர் என்றும், Annie Besant என்பதனை அன்னை வசந்தை என்றும் குறிப்பிடுதல் இங்கு நாம் சிந்தித்து இன்புறுதற்கு உரியது. இன்னேரன்னவைகள் எல்லாம் நக்கீரரின் சொல்லாக்கநல முறையினைத் தழுவி அமைந்தனவே என்பதனை நினைந்துணரும் போது, நக்கீரரின் புலமை நலம் வியப்பும் விப்மிதமும் விளைவிக்க வல்லதாக உள்ளது.

வாழ்க நக்கீரர்:
வளர்க நக்கீரர் புகழ்:
தொடர்க நக்கீரர்புலமை நலம்!

உ

சிவ சிவ

# காஞ்சிபுரத்தில்

# தேவார விழா

திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்து 21வது அதிபர்
'கயிலைமாமுனிவர்' ஸ்ரீலஸ்ரீ காசிவாசி
**முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்**
அருளாணையின் வண்ணம் நடத்தப்பெறுவது.

துந்துபிஸ்ரீ பங்குனிமீ 17உ (31-3-83) வெள்ளிக்கிழமை காஞ்சிபுரம் ஸ்ரீ ஏகாம்பரநாதசுவாமி பங்குனி உத்திரப் பெருவிழா 14ஆம் நாள்.

திருமுறைவாணர்கள்:

1. தமிழ்மறை இன்னிசைப் பண்மணிகள்
   திரு. T. M. விசுவலிங்கம் சபாபதி சகோதரர்கள்
   திருவாவடுதுறை.
2. தேவார இசைமணி
   திரு. S. முத்துக்கந்தசாமி தேசிகர்
   ஸ்ரீ காசிமடம் கட்டளை ஓதுவார், திருச்சி.
3. திரு. ப இராமச்சந்திரன் விருத்தாசலம்.
4. சங்கீத பூஷணம்
   திரு. சா. தண்டபாணி ஓதுவார் சென்னை.
5. திரு. V. தியாகராஜன்
   ஸ்ரீ காசிமடம் திருமுறைப்பணி, திருப்பனந்தாள்.
6. திரு. S. A. கோபாலன் வேய்ங்குழல், சிதம்பரம்.
7. திரு. கோ. வேங்கடராமன் மிருதங்கம், பனசை.

ஏகம்பத்துறை எந்தாய் போற்றி!

க. பழனிவேலு M. A.
நிர்வாக அலுவலர்

*K. Subrahmanya Iyer B. A.*
*'Thiagarja Vilasam'*
Tniplicane P. O. Madras-5.

குறிப்பு: காஞ்சீபுரம் ஸ்ரீ ஏகாம்பரநாதர் சன்னதியில் இரவு 8மணிக்கு தொடங்கிக் கச்சியேகம்பர் திருவுலாவரும் வீதிகளில் இரவில் இன்னிசைத் திருமுறை கோஷ்டி நடைபெறும்.

உ

சொக்கலிங்கம் துணை

Sri Kasi Mutt Religious Charities, Tirupanandal

PROPRIETOR & TRUSTEE

# H. H. Sri-la-Sri Kasivasi Muthukumara swami Tambiran Swamigal Avergal

திருப்பனந்தாள்

# ஸ்ரீ வீரியம்மன் பங்குனி உத்திரப்பெருவிழா

19—3—83 முதல் 25—3—83 வரை

திருவிழாக்காலங்களில் திருமுறைப்பணி செய்யும் இசைவாணர்கள் :-

1. தமிழ்மறை இன்னிசைப் பண்மணிகள்,
   திரு. T. M. விசுவலிங்கம் சபாபதி சகோதரர்கள்
   திருவாவடுதுறை.
2. தேவார இசைமணி
   திரு. S. முத்துக்கந்தசாமி
   ஸ்ரீ காசிமடம் கட்டளை ஓதுவார், திருச்சிராப்பள்ளி.
3. திரு. V. தியாகராசன், ஸ்ரீ காசிமடம் திருமுறைப்பணி, திருப்பனந்தாள்.
4. திரு. S. A. கோபாலன் - வேய்ங்குழல், சிதம்பரம்.
5. திரு. கோ. வேங்கடராமன்—மிருதங்கம், திருப்பனந்தாள்.

Religious charities
Sri Kasi mutt
Tirupanandal

உத்திரவுப்படி,
R. V. SUBRAMANIAM
Manager

குறிப்பு:- திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்து அதிபர் கயிலைமாமுனிவர் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி எஜமான் சுவாமிகள் அவர்களின் திருவுளப்பாங்கின் வண்ணம் 31—3—83 ஆம் தேதி காஞ்சீபுரம் ஸ்ரீ ஏகாம்பரநாதர் பங்குனி உத்திரப்பெருவிழாவிலும் இன்னிசைத் திருமுறைக் கோஷ்டி இரவில் நடத்தப்பெறும்.

# நூல் நிறை

## மாணிக்கவாசகர்

[ஆசிரியர் கோ. வன்மீகநாதன்; வெளியீடும் கிடைக்குமிடமும்: சாகித்ய அக்காதெமி, ரவீந்திர பவன், புதுதில்லி, அ. கு. எ: 110 001. சென்னைக் கிளை: சாகித்ய அக்காதெமி, 29, எல்டாம்ஸ்ரோடு, சென்னை 18. அ. கு. எ. 600 018. பக்கங்கள் 87. விலை ரூ 4-00]

முதுபெரும் அறிஞர் திரு. கோ. வன்மீகநாதன் அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய நூலை அவரே மொழிபெயர்த்த ஆக்கம் இது. மொழிபெயர்ப்பை மூல நூலாசிரியரே செய்தால் தொடர் அமைப்புக்களில் எவ்வளவு சுகம் இருக்கும் என்பதற்கு இந்நூல் ஒரு தலைசிறந்த உதாரணம் எனலாம்.

புராணங்கள் வழியாக மாணிக்க வாசகரைக் காணுமல், அம்மெய்ஞ் ஞானியின் பனுவல்கள் வாயிலாக அவரைத் தெரிசித்துத் தெரிசிக்கச் செய்யும் உத்தி இந்நூலின் தனித் தன்மையாகும்.

வாழ்க்கை வரலாறு, மாணிக்க வாசகர் இயற்றிய நூல்கள், முகப்பு, இருள்மலநிலை, அருள் உறு நிலை, இன்புறு நிலை, ஐக்யானுபூதி, விதேகமுத்தி, மாணிக்கவாசகரைப் பற்றி ஒரு மதிப்பீடு என்ற தலைப்புக்களில் சலிப்புத் தட்டாத ஆய்வுரைகளை ஆசிரியர் நல்கி உள்ளார்.

18 ஆண்டுகளே வாழ்ந்து 51 பதிகங்களால் (658 பாடல்களால்) பக்தர் நெஞ்சங்களிலும் இலக்கிய நெஞ்சங்களிலும் நிலைத்த இடம் கொண்ட மெய்ஞ்ஞானியின் ஸ்திரத் தன்மைகளுக்கு இந்நூல் காரணங்களைக் கண்டு பிடித்துச் சொல்கிறது.

''காலத்தின் பழமையால்தான் ஒரு மெய்ஞ்ஞானி நம் மதிப்பிற்கு உரியவராகிறுர் என்றுல் நாம் மகாத்மா காந்தியை ஊறுகாய்ச் சாலில் பல நூற்றுண்டுகள் போட்டு வைத்திருக்க வேண்டும்'' (பக் 12) என்று கூறும் ஆசிரியர் மாணிக்கவாசகர் கால ஆய்விலும்

'மனமின்றி' ஈடுபடுகிருர். இந்த ஆய்வை இவரே சுவையற்றது என்று வருணிப்பதுதான் தவறுனது. அவை மிக ருசியான வாதங்கள்.

திருவாசகம் மெய்ஞ்ஞான இயலில் ஜனநாயகத் தன்மையைப் புகுத்துவது (பக் 30); 'மானிட இயலுக்கு மேலானதொரு அன்பின் கதை, வரலாறு, சுயசரிதை' (பக் 31) என்று தெளிவு செய்வது நமக்குக் குதூகலத்தைக் கொடுக்கிறது.

கீழை நாட்டு மெய்ஞ் ஞானிகளே பற்றிக்கொண்ட ஒரு ருசிகரமான உபாயம் 'நாயக நாயகி பாவம்' ஆகும். மாணிக்க வாசகரின் மெய்ஞ்ஞான யாத்திரையின் அநுபவப் பாடல்களில் இந்த உபாயம் எவ்வளவு லாவகமாக அமைந்துள்ளது என்பதை நான்கு தலைப்புகள் விரிவாகக் கூறுகின்றன. அவருரை நம்முரைகளாகக் கொண்டு மெய்யுணர ஏற்ற அமைப்பில் திருவாசகம் அமைந்திருக்கும் பெற்றிமையை உணரும் வண்ணம் ஆசிரியர் விரித்துரைக்கிருர்.

தேவார மூவர் பாடல்களின் செல்வாக்கோடு ஒப்பிடும் (86 ஆம் பக்கக்) கருத்து, சுந்தரர் திருத்தொண்டத் தொகை பாடியது பற்றிக் கூறும் 10 ஆம் பக்க (வரி 24, 23, 26 ஆம் வரிகளின்) கருத்து ஆகியவை எல்லோராலும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்குமா என்பது தெரியவில்லை. மேற்கோள் நூல்களின் பட்டியல் ஒன்று கொடுத்திருக்கலாம்.

திருப்பனந்தாள் காசிமடம் அதிபர் கயிலைமாமுனிவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி எஜமான் சுவாமிகள் அவர்கட்குக் காணிக்கையாகப் பெற்று சாகித்ய அக்காதெமி வெளியிடும் முதல் நூலும் முதன்மை நூலும் ஆகும் இது.

திருவாசகத்தைப் படிப்பதற்கு முன்பு ஒரு முறையும் திருவாசகத்தைப் படித்த பிறகு பலமுறையும் படித்து அநுபவிக்க வேண்டிய அரிய ஞான விருந்து என்று இந்நூலைச் சொல்லலாம்.

## என் சரித்திரம்

[ஆசிரியர்: மகா மகோபாத்யாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள். பதிப்பு: 2. வெளியீடும் கிடைக்குமிடமும்: டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம், திருவான்மியூர், சென்னை-41, அ. கு. எ. 600 041, பக்கங்கள் 22+776+படங்கள் 8 விலை ரூ. 48].

டாக்டர் ஐயரவர்களைப் பற்றி நம் தேசபிதா மகான் மகாத்மா

காந்திஜி அவர்கள் 27-3-1937 ஆம் ஆண்டு 'இந்தப் பெரியவரைப் பார்த்து, இவருடைய சிறந்த உரையைக் கேட்டபிறகு இவர் அடி நிழலிலிருந்து தமிழ் கற்க வேண்டும் என்ற ஆர்வம் எனக்குளெழுகிறது' என்றார். தேசபிதா போற்றித் துதித்த தமிழ்த் தாத்தாவின் என் சரித்திரம் சத்ய சோதனைக்குச் சமமான தமிழ் இலக்கியமாகும். 19, 20 ஆம் நூற்றாண்டுகளின் தமிழ் வரலாறு இதுவே.

டாக்டர் ஐயரவர்களிடம் மேலோங்கிய முதன்மைக்குணம் நன்றியுடைமை. குணக்குன்றாக அறிவுக் களஞ்சியமாக - தமிழ் வாழ இறைவன் அனுப்பிய அருட் கொடையாக விளங்கிய அந்தப் பெருமகனாரின் வரலாற்றில் பாதியே அவர் எழுதிய என் சரித்திரம். நமக்கு நல்லூழ் குறைவாகையினால் எஞ்சிய பாதியை அவரே எழுதி நமக்கு அளிக்கும் பாக்கியம் பெறுமற் போனோம்.

என் சரித்திரம் ஆனந்த விகடனில் வெளிவந்து, 1950 ஆம் ஆண்டு தனி நூலாகப் பதிப்பிக்கப் பெற்றது. அதன் பின்னர் திரு. கி. வா. ஜ. அவர்களின் அதனைச் சுருக்கிய பதிப்பு வெளிவந்தது. அது பல மொழிகளிலும் மொழிபெயர்க்கப் பெற்றது. ஆனாலும் மூலத்தை முழுமையைத் தமிழுலகம் ஆர்வத்துடனும் ஏக்கத்துடனும் வேட்கையுடனும் எதிர் பார்த்தது. இதோ இப்பொழுது முழுப்பதிப்பு, முழுமைப்பதிப்பு வெளிவந்து விட்டது.

122 தலைப்புக்களில் மெய்ப்பாடுகள் ததும்பும் வாழ்க்கை வரலாறு - அதிசய மனிதரின் புனித வரலாறு வெளிவந்துள்ளது. அத்துடன் அந்த மேதை பதிப்பித்த நூல்களின் அகர வரிசை ஆண்டுடன் வெளிவந்துள்ளது. இணைப்பில் வாழ்க்கை நிகழ்ச்சிகளின் சுருக்கம் ஒன்றும் சிறப்புப் பெயரகராதியும் வெளிவந்துள்ளது.

டாக்டர் ஐயர் அவர்கள் 1942இல் இறையடி சேர்ந்தார்கள். அவர்களுக்குப் பிறகு 8 ஆண்டுகள் கழித்து இந்நூலின் முதற்பதிப்பை வெளியிட்டவர்கள் அவர்தம் திருமகனார் அமரர் திரு. S. கல்யாண சுந்தரம் ஐயர் அவர்கள் ஆவர். இந்த இரண்டாம் பதிப்பை இவர்தம் திருமகனார் திரு. க. சுப்பிரமணிய ஐயர் அவர்கள் நூலக வெளியீடாகப் பதிப்பித்துள்ளார்கள். திருத்தமாக அழகாக - திண்மையாக - வெளியிட்டுள்ளார்கள்.

வரிக்கு வரி நாம் அறிந்து கொண்டேயாக வேண்டிய செய்திக் களஞ்சியங்கள் நிறைந்த இந்த நூல் தமிழறிந்தோர் அனைவரும் வாங்கிக் கற்க வேண்டியதாகும்.

உ

திருச்செந்திலாண்டவன் துணை

# சங்கற்பநிராகரணம்.

உரையும் விளக்கமும்

கு. சுந்தரமூர்த்தி M. A. திருப்பனந்தாள்.

## காப்பு.

### நேரிசை ஆசிரியப்பா.

திருந்திய அருந்தவம் பொருந்துபல் முனிவர்
கமையாக் காதல் அமையாது பழிச்சும்
நிகரில் செக்கர்ப் புகர்முகத்து எழுந்த
புனிற்று வெண்பிறைத் தனிப்பெருங் கோட்டுத்
தழைசெவி மழைமதப் புழைநெடுந் தடக்கை
வாள்தரும் மும்மை நாட்டம் நால்வாய்ப்
பாசம் அங்குசம் தேசுறும் எயிறுஒள்
கனியிவை தாங்கும் புனித நாற்கரத்து
அங்கதம் கடகம் பொங்கிழை யாரம்
நிறைமணிச் சுடிகைக் கறையனல் கண்செவி
கொண்ட திண்பெரும் பண்டிக் குறுந்தாள்
களிறுதன் இருகழல் கருதா
வெளிறுஉறு துயரம் வீட்டினம் பெரிதே.

(இ-ள்) திருத்தமாகிய அரியதவத்தினை வாய்ந்த பல முனிவர்கள் எஞ்ஞான்றும் நிரம்பாத ஆசையோடும் நீங்காது வழிபடும் ஒப்பற்ற செவ்வானம் போன்ற புள்ளியையுடைய திருமுகத்திலே தோற்றம் செய்த குழவி வெண்திங்களைப்போன்ற ஒற்றைப் பெருங் கோட்டினையும், தழைந்த செவியிரண்டினையும், மழையைப்போலும் பொழிகின்ற மும்மதத்தினையும், துளையையுடைய நீண்ட பெரிய துதிக்கையினையும், திங்கள், ஞாயிறு, நெருப்பு என்னும் ஒளியினைக் கொண்ட மூன்று விழிகளையும், தொங்குகின்ற வாயினையும், பாசக் கயிற்றினையும் தோட்டியினையும் அழகு பொருந்திய ஒற்றைக் கொம்பினையும்ஒப்பற்றமாங்கனியினையும் தாங்கியதூய நான்குகைகளையும்,வளையினைத்தரித்த தோளினையும்,கங்கணம் அணிந்த கரத்தினையும், மிகுந்த அணிகளையும் முத்துமாலையினையும் கொண்டு நிறைந்த மாரி

யினையும், மாணிக்க முடியோடு கரிய கண்டத்தைப் பெற்ற பாம்பினைக் கச்சாகக் கட்டிய வலிய பெரும் புகழினையுடைய வயிற்றினையும், சிறிய திருவடிகளையும் உடைய, பிரணவ வடிவாகிய யானை முகப் பெருமானது இரு திருவடிகளையும் நினைத்து. அறிவின்மையினால் உண்டாகிய துன்பப் பெருக்கினைப் பெரிதாக மதியாமல் அற ஒழித்தோம் என்றவாறு.

கமையா - அமையாத. முகம் யானை வடிவினது ஆதலின் 'புகர்முகம்' என்றார். புகர் - புள்ளி. 'புனிறென் கிளவி ஈன்றணிமைப் பொருட்டே' (தொல் - உரி) என்பவாகலின், தோற்றம் செய்த வெண் பிறை எனப் பொருள் கொள்ளப்பட்டது. கோடு இரண்டனுள் ஒன்றைப் பாரதம் எழுதக் கைக் கொள்ளுதலின், முகத்தில் ஒரு கொம்பே உளதாயிற்று. அறிவு, இச்சை, செயல் என்னும் மூவகை யாற்றலானும் உயிர்களை உய்யக் கொள்ளுதலின். அவற்றையே ஈண்டு மதம் என உருவகித்தார். "வாள் ஒளியாகும்" (தொல்-உரி) ஆதலின் ஒளிதரும் எனப் பொருள் கொள்ளப்பட்டது. மும்மை நாட்டம் - முக்கண்கள்; அவை ஞாயிறு திங்கள் நெருப்பு என்பன. நால்வாய் - தொங்குகின்ற வாய்; துதிக்கை. தேசு - ஒளி: அழகு. எயிறு - ஒற்றைக் கொம்பு. தந்தை வலத்தால் பெற்ற கனியைக் கையில் உடைத்தாதல் பற்றிக் கனியையும் உடன் கூறினர். 'தந்தை வலத்தால் அருள்கைக் கனியோனே'—என்னும் திருப்புகழும். அங்கதம் - தோள்வளை. சுடிகை - முடியிலமைந்த மணி. கறைஅணல்- கரிய கழுத்து. கட்செவி - பாம்பு. பண்டி - வயிறு. அறியாமை யாலாய துன்பம் - பிறவித்துன்பம்.

இறைவனும் மூத்த பிள்ளையாரும் வேறல்லர் ஆதலின் குழவித் திங்களும் மும்மை நாட்டமும் இவர்க்கும் உளவாயின.

## நூல் தோன்றற்குரிய காரணமும் களமும்.

---

பெருங்கடல் உதவும் கருங்கடு வாங்கிக்
கந்தரத் தமைந்த அந்தமில் கடவுள்
பாலரை யுணர்த்தும் மேலவர் போலக்
கேட்போர் அளவைக் கோட்படு பொருளால்
அருளிய கலைகள் அலகில வால்அவை
பலபல சமயப் பான்மைத் தன்றே, அஃதால்

அந்நூல் தன்மை யுன்னிய மாந்தர்
இதுவே பொருளென் றதன்நிலே அறைதலின்
வேற்ருேர் பனுவல் ஏற்ருேர்க் கிசையா
மாறு பாடு கூறுவர் அதனுல்
புறச்சம யங்கள் சிறட்பில வாகி
அருளில் மாந்தரை வெருளுற மயக்கி
அலகைத் தேரின் நிலேயில் திரும்
ஈங்கிவை நிற்க நீங்காச் சமயம்
மூவிரு தகுதி மேவிய தாமும்
ஒன்ருே டொன்று சென்றுறும் நிலேயில்
ஆறும் மாரு விறுடைத்து இவற்றுள்
எவ்வ மில்லாச் சைவநற் சமயத்து
அலகில் ஆகமம் நிலவுதல் உள அவை
கனகம் இரணியம் காஞ்சனம் ஈழம்
தனம்நிதி ஆடகம் தமனியம் என்றுஇப்
பலபெயர் பயப்பதோர் பொருளே போலப்
பதிபசு பாச விதிமுறை கிளக்கும்
வாய்ந்த நூல்கள் ஆய்ந்தன ராகி
ஆசா னுகி வீசிய சமத்துடன்
ஏழஞ்சு இருநூ றெடுத்த ஆயிரம்
வாழுநற் சகனம் மருவா நிற்பப்
பொற்பொது மலிந்த அற்புதன் ஆனி
ஆரும் விழவிற் பொற்றேர் ஆலயத்து
ஏரு எண்மர் நிரையில் இருப்ப
மயங்கு வாத மாயா வாதி
முயங்கிட ஒருதலே முதுவெதிர் மணிசேர்
பெண்ணே சூழ்ந்த வெண்ணெயம் பதிதிகழ்
மெய்கண் டவன்அருள் கைகண் டவர்களில்
ஒருவர் ஒருதலே மருவி யிருப்ப
வஞ்சப் பிறவிக்கு அஞ்சிவந் தொருவன்
ஏதுஇறை யருள்என ஈதெனும் மாயா
வாதியை அயலினர் மறுதலேத் தருள்தர
மற்றவர் அயலினர் அவருரை மறுத்துச்
சொல்தர அயலினர் அவருந் தொலேவுற்று
இன்னே எவரும் முன்னே கழிவுழி
ஆங்கயல் இருந்த அருளினர் அழகிது
நீங்கள் சங்கற்பம் நிராகரித் தமையென

மற்றவர் உரைத்த சொற்றரு பொருள்கொடு
வாத செற்பை விதண்டையும் ஏதுவும்
ஓது நால்வகை உவமையுந் திகழ்தர
அருள்சேர் மாந்தர் வெருள்சே ராமல்
தர்க்கமும் விடையமுங் கற்க
நற்கவி மாந்தர் நகநவிற் றுவனே.

(இ-ள்) பெரிய கடலாலே கொடுக்கப்பட்ட சரியநஞ்சைத் திருக்கையினுலே வாங்கி அயின்று மிடற்றிலே தரித்த அழிவில்லாதவன் ஆகிய சிவபெருமான், குழந்தைகளுக்கு அவ்வப் பருவங்களுக்குத் தக்க அறிவைப் புகட்டி நடத்தும் மேன்மைப்பட்ட தந்தை தாயரைப் போல, கேட்கத் தொடங்கிய மாணுக்கர்களின் அறிவு எல்லேயின் கோட்பாட்டுக்கு அமைந்த பொருளால் செய்யப்பட்ட நூல்கள் எண்ணிறந்தனவாம், அந் நூல்கள் பலவும் சமயப்பகுப்போடும் கூடியவாம், ஆதலால் அந் நூல்களது உண்மையை ஆராய்ந்து அறிந்தவர்கள் நமக்கு இதுவே மெய் நுவலும் பொருள் என்று அச்சமயத்தையே திறமாகக்கூறி நிற்கையினுலே மற்ருெரு சாத்திரத்தை ஆராய்ந்தறிந்தவர்களுக்கு அவன் சொல்லும் சாத்திரமும் பொருளும் பொருந்தா. ஆகையால் அவன் சொன்னது இவனுக்குப் பொருந்தாமல் இவன் சொன்னது அவனுக்குப் பொருந்தாமல் ஒன்றுக்சொன்று மாறுபடச் சொல்லா நிற்பர்கள், அவ்வாறிருப்பதால் உலகாயதன் புத்தன் சமணன் மீமாஞ்சன் மாயாவதி பாஞ்சராத்திரி என்று சொல்லப்பட்ட புறச் சமயங்களில் உள்ள பொருண்மைகள் மெய்மையிலவாய்ச் சிவபரம் பொருளின் கருணேக்கு ஏது அல்லாத பக்குவமில்லாத உயிர்களே ஈது ஓர் பொருண்மை இருந்தபடி என்று அச்சப்படத் தக்கதாக மருட்டிப் பேய்த்தேரைத் தண்ணீர் என்று கருதி இதைக் குடித்து விடாய் தீரலாம் என்று வந்தவனுக்கு அந்தத் தண்ணீர் பொய் யாய்ப் பேய்த்தேர் மெய்யான தன்மைபோல இத்தகைய பொய்நூல் களும் பொருள்களும் மெய் போலத் தோன்றிப் பொய்மையாய் முடியும். ஆகையால் இவ்விடத்திற் கூறிய சமயங்களும் அவற்றில் கூறப் பட்டிருக்கும் பொருண்மைகளும் நமக்கு வேண்டுவதில்லே. தம்மில் ஒன்றேடொன்று கூடிக்கொண்டிருக்கும் சைவம் பாசுபதம் மாவிரதம் காளாமுகம் வாமம் வைரவம் என்கிற அகச்சமயங்கள் ஆறும், ஒரு சமயத்தோடு ஒருசமயம் முரணும் அளவில் அந்த ஆறு சமயங்களும் தனித்தனியே உயர்ந்ததாய் இருக்கும், இவற்றுள் ஒன்ருக விளங்கு வதும் குற்றஞ்சொல்ல ஒண்ணது இருப்பதுமாய சைவம் ஆகிய

நல்ல சமயத்துள் இறைவன் அருளிய ஆகமங்கள் எண்ணிறந்துள்ளன. அவ்வாறு பலவுளவேனும் அவையனைத்தும் ஒரு முடிவையே கூறுவனவாம். எது போல எனில், கனகம் இரணியம் காஞ்சனம் ஈழம் தனம் நிதி ஆடகம் தமனியம் எனப் பல பெயரால் கூறப்படினும், அவையனைத்தும் பொன் என்னும் ஒரு பொருளையே குறிப்பது போலாம். எனவே அவையனைத்தும் பதியின் இலக்கணத்தையும் பசுவின் இலக்கணத்தையும் பாசத்தின் இலக்கணத்தையுமே சொல்லா நிற்கும், இங்ஙனம் கூறப்பட்டிருக்கும் ஆகமங்களைக் கற்றுணர்ந்து ஆராய்ந்த அறிஞர்களாய்ச் சமயம் முதலிய நால்வகைத் தீக்கைகளையும் பெற்றவர்களாய்க் காய்தல் உவத்தல் இன்றி எதனையும் ஒப்ப எண்ணி ஆராய்பவர்களாய் உள்ள பெரியோர்கள், ஆண்டு ஆயிரத்து இருநூற்று முப்பத்தைந்து செல்லா நின்ற காலத்திலே, பொன்னினாற் செய்யப்பட்ட திருப் பொதுவின் கண்ணே நிறைந்து எழுந்தருளியிருக்கும் கூத்தப்பெருமானுடைய ஆனித் திங்கள் ஆரும் திருவிழாவிலே, பொலிவினைக் கொண்ட தேர் மண்டபத்திலே ஏறி முன் சொல்லப்பட்ட ஆசாரியன்மார் எண்மர் ஒழுங்கிலே எழுந்தருளியிருக்கும் அமையத்தில், சற்காரியவாதமின்றி ஒருகாற் சொன்னது ஒருகாற் சொல்லாமல் முன்னொடுபின் மலைந்து வரும் மாயாவாதி என்னும் சமயி ஒருபுறத்திலே கூடியிருக்க, முதிர்ந்த மூங்கில்களின் உண்டாகிய முத்துக்களோடும் கூடியிருக்கும் பெண்ணையாறு சூழப்பட்ட திருவெண்ணெய்நல்லூர் என்கிற திருப்படைவீட்டிலே தோன்றியருளிய மெய்கண்டதேவரின் திருவருளுக்கு இலக்காகிய அடியார்களிலே ஒருவர் அந்தக் கூட்டத்தின் ஒரு புறத்திலே பொருந்தி எழுந்தருளியிருக்க, தீங்கை விளைப்பதாய் இருக்கும் பிறவிப்பிணிக்கு அஞ்சிய ஒருவன் வந்து இவர்களைத் தொழுது, இறைவன் திருவருள் எத்தகையது என்று வினவ, தன் நிலையில் நின்று இதுவே பொருள் என்று நாட்டின மாயாவாதியை அருகே இருந்தவர் அது பொருள் அல்ல என்று தம்முடைய பொருள் இது என்று நாட்ட, அவர் அருகில் இருந்தவர் அவர் சொன்ன பொருளைக் கண்டித்துத் தம்முடைய பொருள் இது என்று நாட்ட, அவர் அருகிருந்தவராலே அவரும் கண்டிக்கப்பட்டு, இவ்வாறு ஒருவரை ஒருவர் மறுத்து எட்டுப் பேரும் முன்னே தள்ளுண்ட அமையத்து, அவ்விடத்து அவர்கள் அருகே எழுந்தருளியிருந்த ஆசிரியன்மார்களைப் பார்த்து நீங்கள் உங்கள் பொருண்மைகளைக் கூறியதும் மறுத்ததும் மிகவும் நன்றாயிருந்தது என்று அருளிச் செய்து அவர்கள் சொன்ன சொற்களில் உண்டாகிய பொருள்களை எடுத்துக் கொண்டு, யான் வாதமும் செற்பையும்

விதண்டையும், ஏதுவும், வினை பயன் மெய் உரு என்று சொல்லப் பட்ட நால்வகை உவமையும் இந்நூலிலே விளங்கத்தக்கதாக, திருவருளுக்கு ஏதுவாயுள்ள பக்குவம் பெற்ற உயிர்களுக்கு அம் மலவு எனகிற அச்சம் வந்து தாக்காமல் அவர்கள் இந்நூலில் உண்டாகிய ஒருவர்க்கொருவர் மாறுபட்டுரைக்கும் பொருண்மை களையும் உண்மைப் பொருண்மைகளையும் கற்கத்தக்கதாகவும், நல்ல கவிதைபயின்ற பெரும்புலவர்கள் இவனும் ஒரு நூல் செய்வதே! என்று நகைக்கத்தக்கதாகவும் இந்நூலைச் செய்கின்றேன் என்றவாறு.

கருங்கடு-கரிய நஞ்சு. கந்தரம்-கழுத்து அங்கம்-ஈறு. மேலோர் தாய் தந்தையர். வெருள்-மருட்சி. அலகைத்தேர்-பேய்த்தேர்; கானல் நீர். மாறுவீறு-மாறுத பெருமை. எவ்வம்-குற்றம். கனகம் முதலாகத் தமனியம் ஈறுகக் கூறப்பட்ட எட்டுச்சொற்களும் பொன் என்னும் ஒரு பொருள் குறிப்பன. இதைப்போன்றே ஆகமம் பல வேனும் அவை யனைத்தும் முப்பொருள் உண்மை என்றஒருபொருண்மையையேநுவல் வனவாம். வீசிய-ஒளி மிக. சமத்துடன்-நடுநிலைமையுடன். நடுநிலை மையில் ஒளிமிகுதலாவது பகை நொதுமல் நட்பு என்னும் முத்திறத் தாரிடத்தும் சிறிதும் பிறழ்வின்றி ஒப்பநிற்கும் நிலைமை. ஏழு அஞ்சு-35. இதனுடன் இருநூறு எடுத்தஆயிரம் எனவே 1235; ஆயிரத்து இருநூற்றுமுப்பத்தைந்து சகஆண்டுடன் 78 ஆண்டுகளைக் கூட்டின் கி. பி. 1313 ஆகும். எனவே இந்நூல் எழுந்த காலம் இது வெனத் தெரிகிறது. முதுவெதிர்-முதிர்ந்தமூங்கில். சங்கற்பம்-நினைவில் கொண்டுஉரைப்பதுவாதப் உண்மை. மப்பொருளையறியும்வேட்கையுடை யோர் இருவர்தமக்குள் ஒருவர்க்கொருவர் வினவிக்கொள்ளும் வினவும் விடையும் ஆம். செற்பம்-தன் கொள்கையை மட்டும் நிலைநாட்டுவது. விதண்டை - தன்கோள் நிறுவாது பிறர் கொள்கையையே மறுப்பது. ஏது - காண்டல் கருதல் உரை முதலிய ஏதுக்களான் உண்மையை நிறுவது. நால்வகையுவமை :- வினை, பயன், மெய், உரு என்பன. 'வினைபயன் மெய்யுரு என்ற நான்கே, வகைபெற வந்த உவமத் தோற்றம்' என்னும் தொல்காப்பியமும். அறிஞர்கள் நகுதற் கேதுவாகத் தம் பொருண்மை அமையும் எனபது அவையடக்க மாகக் கூறியதாகும்.

## மாயாவாதியின் கருத்து

நவிற்றிய நிரையின் அவித்தையி னேன்உரை
நித்தன் அறிவன் சுத்தன் அகண்டிதன்
நிருவிகற் பன்நிர்த் தத்துவன் நிரஞ்சனன்
சொல்வகை எவையும் தொடராத் தூய்மணி
வரம்பில் வேதச் சிரந்தரு பரம்பொருள்

சத்தாய் எவையும் தாளுய் அவித்தை
தொத்தாது உயர்ந்த தொல்சுடர் மூவா
இன்ன தன்மையன் ஏகன் அனேகன்
கன்னற் பெருஞ்சுவை தன்னிற் பிறவாப்
பெற்றியி னிருந்து பொற்பணி இயல்பினின
வான்வளி அனல்நீர் மண்மருந்து அன்னம்
ஆன தாது ஆறைங் கோசத்
தொகுதி யாக்கைப் பகுதியது ஒருபுடை
சுத்தி வெள்ளி யொத்தன மித்தையில்
தானென லாகும் தன்மைத்து உலூதையில்
சின்னூல் தகையின் வேற்றுமை மரீஇயது
என்னப் பன்மையது எனின்இலை பழம்பூத்
தோல்நார் வயிரம் தருத்தரும் தொன்மையின்
வான்நாரம்திரை நுரைதரு வாய்மையிற்
கூடும் அசித்தைச் சித்துஉத வாதெனின்
நெற்பதர் பலாலத் தில்பரம் தரும்இது
தன்னியல் பென்றும் விளையாட் டென்றும்
முன்னுள மறைகள் மொழிதலின் ஒருநூல்
பன்மணி நிலையும் பசுப்பால் எனவும்
பகலவன் நீரில் அலர்கதிர் எனவும்
கூவல் ஆழி குளம்சிறு குழிகால்
வாவி யாவையும் வருபுனல் எனவும்
அவ்வற்று அடங்கி ஆடியுள் நிழலெனத்
தோன்றி யாக்கைநற் காந்தத் துஇரும்பும்
கனவில் நீங்கும் கங்குலிற் கயிறும்
புனலில் தோன்றும் பேய்த்தேர்ச் செய்தியும்
அன்னதும் பின்னர் நன்னிறப் பளிங்கெனப்
பதினூற் கரணத்து ஒருமூன்று அவத்தை
நாளும் நாளும் நயந்துறும் இருபயன்
தன்னில் சாராத் தொன்மைத் தன்மை
தற்பண நிழற்கண் குற்றிபாய்ந் தற்றே
இவ்வியற் பந்தப் பவ்வம தகல
விண்முதல் தந்த கொண்மூப் படலத்து
இருள்அற உதித்த கால்தக விவேகம்
தன்னில் தோன்றிச் சாதக மனத்தையும்
மன்னகப் பிரிப்பும் மடியிழை வாங்கலும்
போல ஞாலம் பொய்யறக் கழிஇத்

தானே தானாய்த் தன்னில் தன்னைத்
தானே கண்டு தன்னலம் உற்று
வசையில் தத்துவ மசிபதத் தெளிவால்
அகமே பிரம காயினன் எனஅறிந்து
அசல னாகிநற் சலம்சல மதியெனக்
கண்டிடும் உடலம் விண்டகல் கடத்து
மங்குல் அதுஉடைதர எங்குமாம் தகைத்தே
இவ்வகை யுணர்ந்து செய்தொழில் அருத
மடவோர் தாமும் கடனா இயற்றும்
கன்ம காண்டத் தொன்மைப் புரிவால்
தோற்றிய வித்தை மேற்கடை அரணியில்
எழுந்தெரி அவற்றை விழுங்கிய தென்னத்
தன்னொழிந் துள்ள தானாய் அழியும்
அந்நிலை யன்றி அழிவறு முத்தி
ஏயா தென்றுதன் இயல்பை
மாயா வாதி வகுத்துரைத் தனனே.

கூட்டுநிலை:

(இ-ள்) முற்கூறிய ஒழுங்கில் மாயையின் விளைவுகளால் வாதிக்கப் பட்டுப் பரப் பிரமம் இப்படி மயங்கி நிற்கும் என்று சொல்லும் மாயாவாதியி னுடைய மதம் இருக்கும்படி ஒருக்காலும் அழிவு இல்லாதவனுமாய் முற்றுணர்வினனாய் வினையின் நீங்கியவனாய், யாண்டும் நிறைந்தவனாய்ச், சொல்லும் பொருளுமாய் இருக்கும் மெய் நூல்கள் ஒன்றானும் சென்று கிட்ட ஒண்ணாமல் இருக்கும் தூய இரத்தினமாய், எல்லையற்ற பொருள்களை நுவலும் மறைமுடிவாய பொருளாய், நிலையுடையதாய், எல்லாப் பொருள்களும் தானேயாய், அவ்வாறு இருந்ததாயினும் அப்பொருள்களால் கட்டுப்படாததாய், மிக்க பழமையான ஒளியாய் ஒருக்காலும் கெடாத தன்மையனாய், ஒருவனாய், எண்ணிறந்த உயிர்கள் தொறும் உயிர்க்குயிராய் நிற்பவனாய், கரும்பில் உண்டான மிகுஇனிமை அந்தக் கரும்புக்கும் தோன்றாத இயல்பு போலத் தன்னிடத்தில் உண்டாகிய இன்பத்தையும் தான் அறியாமல்இருந்துள்ள பரப் பிரமமானது உவகை யுண்டாக்குமிடத்து, பொன்னானது பலவான அணிகளாய் இருந்த தன்மைபோல, அப்பரம் பொருள் தானே விண்ணும் வெளியும் நெருப்பும் நீரும் மண்ணும் அவற்றால் உண்டாக்கப்பட்ட தாதுக்கள் ஆறும் அன்னமயம் பிராணமயம் மனோமயம் விஞ்ஞான மயம் ஆநந்தமயம் என்னும் ஐங்கோசங்களும் ஆக இவை யெல்லாமாகக் கூடியிருக்கும் உடலின் பகுதியாய் இருக்கும்.

# திருவிளையாடல் புராணம்

உரைநடை

வாதவூரர், தம்மைக் கண்டோர், ''இவர் பித்தர்'' என்று நகைக்கும் படி அதிதீவிரபக்குவம் எனப்படும் நாலாம் சத்திநிபாதம் (தீவிர தரம்) உண்டாகத் தமது உண்மை அறிவினை மறைத்த மலத்தினும் மிகவும் அஞ்சி, முன் பெரும் பாரந் தாங்கினோனையும், பின் கட்டு நீங்கியவனையும் போன்று, ''அனலிடைப்பட்ட வெண்ணெய் போல நெஞ்சம் உருகுமாறு அடியேனை உருக்குகின்ற இவ்வேதுவினால் என் அறிவினைமறைத்த ஆணவ மலத்தின் வலியினைக் கெடுத்து அடியேனை ஆட்கொள்ளும் கருணையங்கடல் வீற்றிருக்கும் இடம் இதுவே போலும்'' என்று கருதியவராய்த் திருப்பெருந்துறையினுட் புகுந்தார். முன்னர், வாதவூரர் திருக்கோயிலைச் சார்ந்து அங்குள்ள [1]சிவ தீர்த்தத்தில் நீராடித் திருவாயிலை அடைந்து இறைவனைத் தரிசித்து வணங்கித் தோத்திரஞ் செய்து திருக்கோயிலை வலம் வந்தார். அப்போது, பண்டொருகாலத்தில் மறையினை ஓதியும் அறியமுடியாத உண்மைப் பொருளைச் சனகாதி முனிவர்கள் தெளியுமாறு மௌன நெறியினால் தெளிவித்த தட்சணா மூர்த்தியின் திருக்கோலம் எழுந்தருளப் பெற்றதாகிய ஒரு குருந்த மரத்தினை எதிரே கண்டார்.

இறைவன் குருமூர்த்தியாக எழுந்தருளியிருக்கும் காட்சி

வேதங்கள் ஒருபாலும், சிவாகமங்கள் ஒருபாலும் புராணத்துடன் கிடந்த இசைநூல் ஒருபுறமும், பல சமய சாத்திரங்கள் ஒருபுறமும் வாய்விட்டு ஒலித்துக் கொண்டிருந்தன. வேதங்கள் கூறிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு பொருள்களையும், வீடுபேற்றிற்குக் கருவி என்று ஆகமங்கள் கூறும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு பாதங்களையும் சிக்கறுத்து உணர்ந்த பெரிய மாணவர் கூட்டங்களும் வினாவும் விடையுமாக ஒருபுறம் உரையாடிக் கொண்டிருந்தன.

சரியையில் வல்ல உண்மைத் தாதமார்க்கத்தினரும், கிரியையினைச் செய்யும் நல்ல புத்திர மார்க்கத்தினரும், சிவயோகத்தினைச் சாதனையுடன் உணர்ந்த சகமார்க்கத்தினரும், ஞானசாரியத்

---

1. இச் சிவ தீர்த்தம், ''மொய்யார் பொய்கை'' என்பதாம் ''மொய்யார் தடம் பொய்கை புக்கு முகேரன்ன'' என்பது, திருவாசகம் திருவெம்பாவை அடி.

தன்மையைப் பெற்ற சன்மார்க்கத்தினரும் ஒருபால் விளங்கினர்: விதி விலக்குகளைக் கடந்த தவத்தினையுடையராய், ஆடலும் பாடலும் உடையராய், உலகினர் பழிக்கும் வண்ணம் செய்கையினை உடையவராய், அழுகையை உடையராய், நகையினை உடையராய்ப் பாசம் நீங்கிய ஞானக்கண்ணினால் இறைவன் திருவுருவை இடையறாது தரிசித்துக் கொண்டு ஊனக்கண் குருடராய்த் திரிகின்ற ஞான வீரர்கள் ஒருபால் விளங்கினர்.

உள்ளமாகிய ஆகாயத்தில் விளங்கும் சிவசூரியனுக்குத் தோற்றமும் மறைவும் இல்லை; ஆதலால் பகலும் இரவும் தோன்றக் காணாதவராய் நித்திய கடன்கள் முதலாய தவங்களை நெகிழ்ந்தொழியப்பெற்றுத் [1]திகழ்கின்ற ஞானிகள் ஒருபால் விளங்கினர். அவர்களுக்கு ஆடை கோவணமே; உண்டி கைப்பிச்சையே; உறவினர் சிவனடியார்களே; அணிகலன் உருத்திராக்கமாலையே; துயிலுமிடம் வெறுந்தரையே; ஆனாலும், அவர்கள் தூங்குவது பகலும் இரவும் முதலும் நடுவும் முடிவும் இல்லாத இடத்தின்கண்; இஃதே அவர்கள் வாழ்க்கை ஆகும்.

வாதவூரர் திருவருளாகிய வலையில் அகப்படுதல்

இத்தகைய சிறப்பினையுடைய பல தொண்டர் கூட்டத்தின் நடுவிலே கல்லாலமரம் போன்ற பசிய குருந்த மரத்தின்கீழ் யோகாசனத்தில், [2]சிவஞானபோதம் எழுதிய சுவடியினைத் திருச்கரத்தின்கண் தாங்கியிருக்கும் ஒரு அருள்வடிவத்தை வாதவூரர் கண்டார்; ''பொன்னம்பலத்திலே ஆனந்த தாண்டவம் செய்யும் திருவுருவமும், கல்லாலமரத்தின் கீழிருந்து சனகாதி முனிவர் நால்வருக்கும் மன அசைவு நீங்குமாறு உணர்த்தியருளிய திருவுருவமும் இப்பொழுது நாயினேனுக்கு எளிதில் வந்த திருக்கோலமே'' என்று சிவபெருமானுடைய திருக்குறிப்பு உணர்த்தியருள, உணர்ந்து திருமுன் வணங்கிக் கைகளைச் சிரமேற் குவித்து என்பு நெக்குருக உள்ளம் உருகி இனியராகி எளிவந்து அன்பாகிய வலையிற்பட்ட சிவபெருமானுடைய திருவருளாகிய வலையின்கண் அகப்பட்டுக் கொண்டார்:

1. இஃது, உறங்கினவன் கையிலுள்ள பாக்குத் தானே நழுவுதல் போல ஞான நிட்டை மேலீட்டால் நித்திய கடன்கள் முதலாய தவங்கள் தாமே விலகப் பெறுதலாம்.

2. இந்நூல் இரௌரவாகமத்தில் பாச விமோசன படலத்தில் உள்ள பன்னிரண்டு சூத்திரங்களால் ஆயது.

வாதவூரர் உபதேசம் பெறுதல்

தீட்சாகாலம், கனுத்தோற்றம், நன்னிமித்தம் முதலான இவற்றையறிந்து செய்தற்குரிய பக்குவத்தினைக் கடந்த ஞான வொழுக்கத்தினையுடைய மாணவரது பக்குவத்தை நன்கு அறியவல்ல ஞானசிரியன் சிவபெருமானே ஆவர். பார்வை மிருகம்போல வந்தருளிய அவர், செங்கழுநீர் மாலையையும் சந்தனத்தையும் அணிந்து, திருவடியில் வீரக்கழலைக்கட்டி, வாதவூரடிகளின் ஞான ஒழுக்கத்தினையும் அன்பினையும் கண்டு [1]உடல் பொருள் ஆவி மூன்றையும் தான நீருடன் அவர் தத்தம் செய்ய ஏற்று, ஞானக்கண்ணினால் மும்மலங்களையும் போக்கித் திருவடித்தாமரையைச் சூட்டித் [2]தம் அழகிய திருக்கரத்தினைச் சிரசின்மேல் வைத்துச் [3]சூக்கும பஞ்சாட்சரத்தை உபதேசித்து அவரது பாசக்கட்டினைப் போக்கிப் பேரின்பம் விளையும் நிலத்தில் செலுத்திப் போக்கும் வரவும் உள்ளும் புறமும் இல்லாத சிவவடிவமாகச் செய்தார்.

உபதேசம் பெற்ற ஆனந்த நிலை

திருவாதவூரர், அருட்டிரு நோக்கத்தினாலே பழுக்கக் காய்ச்சிய இரும்பு நீரினைப் பருகினாற்போல், தம் அருள் நோக்கினால் மலத்தைக் கெடுத்துத் தன்மயமாக்கிக்கொண்ட பரமாசாரியரையும், அவர் உபதேசமொழி அருளியதையும், தம்மை மறைத்த பாசத்தையும், தம்மையும் மறந்துவிட்டு, மெய்ஞ்ஞான வடிவினராய் ஒன்றனையும் அறியாதவராயினர். தேனும், பாலும், கரும்பும் அமுதமுமாகத் தித்தித்து, ஊனையும் உள்ளத்தையும் உருக்க, அகத்தில் தோன்றிய அருள் ஒளியை உள்ளே உணர்ந்து இன்ப வெள்ளம் தேக்கப்பட்டுப்

---

1. இங்கே, ''அன்றே யென்றன் ஆவியும் உடலும் உடைமை யெல்லாமுங், குன்றே யனையாய்! என்னையாட் கொண்டபோதே கொண்டிலையோ'' (திருவாசகம் - குழைத்தபத்து என வரும் அடிகள் உன்னற்பாலன.

2. இங்கு, ''என்னையும் ஒருவனாக்கி இருங்கழல் சென்னியில் வைத்த சேவக! போற்றி'' (திருவாசகம் - போற்றித் திருவகவல் எனவும், ''பெருந்துறையான் சீரார் திருவடி என்றலைமேல் வைத்த பிரான்'' (திருவாசகம் - திருப்பூவல்லி) எனவும் வரும் அடிகள் உன்னற்பாலன.

3. இங்கே, 'நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம எனப் பெற்றேன்'' (திருவாசகம் - திருவேசறவு) என வரும் அடி கருதற் பாலது.

புறத்தே கசிந்து ஒழுகுவதைப்போல அவருடைய நாவில் ஞானக் கலைமகள் தானே வந்து நிலைபெற்றுத் தங்கினாள். அப்பொழுது அவர் கூப்பிய கையினராய், அசையும் முடியினராய், நீர்ததும்ப அழுத கண்ணினராய், புளகாங்கிதம் அடைந்த உடலையுடைய வராய், நாத் தழுதழுத்த அன்புமொழியினராய்ச் சீவபோதத்தை இழந்து செந்தழலிற்பட்ட நெய்போன்ற உடலையுடையராய்ப் பரமகுருவைப் பணிந்து துதிக்கலாயினர்.

### வாதவூரர் மாணிக்கவாசகன் என்ற பெயர் பெறுதல்

பழுதிலாச் சொற்களாகிய மாணிக்கங்களை வரிசைப்படுத்தி அன்பாகிய வடத்தினால் முறையாகக் கோத்த பாமாலையை அழுது சாத்துகின்ற மெய்யன்பராகிய திருவாதவூரருக்கு ஞானாசாரிய ராகிய சிவபெருமான் மனமகிழ்ந்து, 'மாணிக்கவாசகன்' என்னும் திருநாமத்தைக் கொடுத்தருளினர்.

பழுதி லாதசொல் மணியினைப் பத்திசெய்(து) அன்பு
முழுது மாகிய வடத்தினால் முறைதொடுத் தலங்கல்
அழுது சாத்துமெய் யன்பருக்(கு) அகமகிழ்ந்(து) ஐயர்
வழுவி லாதபேர் மாணிக்க வாசகன் என்றார்.

### ஞான பூசை புரிதல்

திருவாதவூரர் பாட்டிற்கு மகிழும் பரம குருவின் திருவடிகளை ஆனந்தக் கண்ணீரால் திருமஞ்சனமாட்டிச் சொல்லாகிய மலரைச் சூட்டிச் சிவ போதமாகிய இனிய அமுதினை நிவேதித்துச் சிவ ஞானமாகிய ஓமாக்கினியை மூட்டி ஞான பூசையைப் புரியலானார். மாணிக்கவாசகப் பெருமானார் ஆசையினால் வரும் கொடிய பிறவி வாசனை கழிந்து, ஞானாசிரியரது மாணாக்கர்கள் அவ்விடத்தே ஓது கின்ற ஆகமப் பொருளும் உபநிடதப் பொருளுமாகிய அனைத்தையும் கேட்டு அதில் பெருவிருப்புடையராயிருந்தார்.

### ஞானாசிரியர் வாதவூரருக்குச் சில பணிகளை இட்டு மறைதல்

அதனைச் சிவபெருமான் கண்டு இனிக்கின்ற மாணிக்கம் போலும் வாசகமாகிய அமிழ்தினை இன்னும் சில நாட்கள் வரையிலும் தமது திருச்செவியினால் கேட்டு இன்புறவும், கையிலுள்ள செம்பொன் அனைத்தையும் பத்தி என்னும் தலையன்பினைத் தந்து, கொள்ளை கொண்டு, தாம் விரும்பும் பணியை ஏற்றுக்கொண்டு, அரிமர்த்தன பாண்டியனுக்கு இவருடைய பண்பினை அறிவித்து முத்தியினை

அடையச் செய்யவும் புத்தர்களை வாதின்கண் வென்று அழிக்கவும் திருவுளங்கொண்டு மாணிக்கவாசகரை ஏத்தி, ''இங்கே நீ செய்ய வேண்டிய காரியம் சிறிது உண்டு; ஆதலால் சில காலம் இங்கிருப் பாயாக'' என்று கூறி அடியவர்களோடு மறைந்தருளினர்.

தித்திக்கு மணிவார்த்தை இன்னஞ் சின்னாள்
　　திருச்செவியில் அருந்தவும்கைச் செம்பொன் எல்லாம்
பத்திப்பேர் அன்பளித்துக் கவர்ந்து வேண்டும்
　　பணிகொடுபாண் டியனையிவர் பண்பு தேற்றி
முத்திக்கே விடுத்திடவும் புத்தை வாது
　　முடித்திடவுந் திருவுள்ள முன்னம் எய்தி
எத்தித்தொண் டரைக்கருமஞ் சிறிதுண்(டு) இங்கே
　　இருத்திஎன உருக்கரந்தான் அடிய ரோடும்.

மாணிக்கவாசகர் இறைவனைப் பிரிந்து வருந்துதல்

அருள் வடிவினராகிய சிவபெருமான் கனத் தோற்றம் போலத் தம் திருவுருவத்தைக் காட்டி மறைந்தருளுதலும் மாணிக்கவாசகர் துன்பக் கடலுள் அழுந்தி, ''நாய்க்குத் தவிசிட்டதுபோல நாயினே னுக்கு இன்று நினைத்தற்கும் அரிய தமது திருமேனியைக் காட்டி என்னை அடிமை கொண்டு எம்பெருமான் மறைந்தருளியது நனவோ அல்லது கனவோ'' என்று ஐயுற்றார். பின் நனவே என ஒருவாறு மனம் தெளிந்து, ''எந்தையே! உம்முடைய அடியாரோடு கூட்டாது அடியேனையும் அடியேனுடைய வினையையும் இங்கு இருத்தி மறைந்தீரோ! இருவினைக் கொள்கலமாகிய இவ்வுடலைத் தீயின்கண் வீழ்த்திலேன்; மலையினின்று உருண்டு மாய்கின்றிலேன்; வாளினால் குறைக்கின்றிலேன்; நாதனே! அந்த உடலும் உனது உடைமை எனக் கருதி, அவ்வாறே செய்ய இயலாது அஞ்சினேன், இவ்வுயிர் தானே யாயினும் உடலை விட்டுப் பிரிந்திலது. ஐயனே! தேவரீரைப் பிரிந்தும் பொறுக்ககில்லேன்! என் செய்வேன்! எந்தாயோ! எந்தாயோ!'' என்று இரங்கினர்; நிலமேல் வீழ்ந்து புரண்டு அழுதார்.

வாதவூரர் புலம்பல்

''தேவர்கள் அனைவர்க்கும் அறிதற்கு அரியவனே! பிறவிக் குருடனாகிய ஒரு வறிஞன் கையில் தானே வந்து கிடைத்த பெரு விலையினையுடைய மணியைப் போலவும், மழலைச் சொல் தெளியாத ஒரு மதலை தனது கையிற்கொண்ட மணிகள் பதித்த பொற் கிண்ணத்தைப் போலவும், சிறியேனாகிய என்னை எளிவந்து ஆட் கொண்டு அருளிய அருமையை யான் அறியேன்; ஆதலால், யான்

துன்பக் கடலில் அழுந்தப் பிரிவினை அறியாத அடியார்களோடும் மறைந்தருளினீர்! அதற்குக் காரணம், கல்லாத பேதையேனது குறைபாடேயன்றி எம்பிரானுல் யாது குறையுளது? மண் முதலிய முப்பத்தாறு தத்துவங்களையும் மனத்தால் ஆராய்ந்து என்னைக் காண வியலாது கலங்கி வருந்திச் சுழலுகின்ற சிறியேனை ஞான அருள் நோக்கினுல் அத் தத்துவங்கள் முழுதும் கரையும்படி நோக்கியருளி, யான் யான் என்று கருதாத என்னைக் காட்டியருளினீர்! எந்தையே! நீர் எங்குச் சென்றீரோ? வானம் முதலாகிய பூதங்கள் ஐந்தும், அவை தோன்றுவதற்குக் காரணமாக வகுக்கப்பட்ட ஓசை முதலாகிய தன் மாத்திரைகள் ஐந்தும், நீங்காது அலையும் மனம் முதலிய அந்தக் கரணங்கள் நான்குமாகிய இவற்றின் வழியடைப்பத் தேன் முதலிய அறுவகைச் சுவைப் பொருள்களினும் அவை மிக ஊறும் சிவானந்த அமிழ்தினை யான் உண்ணுமாறு நல்கியருளினீர். எந்தையே! நீர் எங்குச் சென்று மறைந்தீரோ? மாசு பொருந்திய ஆணவ வலிமை யினின்றும் வேறுபடாத என்னையும் ஒரு பொருளாகக் கருதிப் பேசு தற்கரிய பேரின்ப வடிவினையுடைய நின்னேடு என்னைப் பின்னே வைத்தருளிய ஈசனே! எந்தையே! அடியேனை இங்கு வைத்து எங்குச் சென்றருளினீரோ!'' என்று வாய் திறந்து அரற்றிக் கதறி அழுதார்.

வாதவூரர் பரிசனங்களைப் போகும்படி அனுப்புதல்

பின்பு மாணிக்கவாசகர் இளங் கன்றை நீங்கிய தாய்ப் பசுவைப் போல மனம் கரைந்தார்; கோபுர வாயிலின் வெளியே சென்று, அங்கே தம்மை எதிர்பார்த்து நின்ற அரசன் பரிசனங்களை எதிர் நோக்கி, ''குதிரைக் கூட்டங்களெல்லாம் ஆடிமாதத்தில் கடற் றுறையின்கண் வந்திறங்கும் என்று நீங்கள் முன்னே சென்று பாண்டியர் பெருமானுக்குக் கூறுங்கள்; போமின்'' என்று கூறி அனுப்பினுர். சேனுவீரர்கள் அரிமர்த்தன பாண்டியன் முன்சென்று வணங்கி, நிகழ்ந்த செய்தியைக் கூறினர். அதனைக் கேட்டுப் பாண்டியன் ஒன்றும் கூருமல் குதிரைகளின் வரவினை எதிர்பார்த் திருந்தான்.

வாதவூரர் பரிக்கு எனக் கொண்டுவந்த பொருளைச் செலவிடல்

வாதவூரர், பாண்டியன் குதிரை வாங்கும் பொருட்டு அளித்த பொருள்களை எல்லாம் குருந்தமரத்தடியில் வந்து ஆண்டருளிய ஞானசாரியனுகிய சிவபெருமானுக்கு உள்ளன்பு பெருக முன் வேண்டிக்கொண்டது போலவே பூசனைக்கும், திருவிழாக்களுக்கும், திருக்கோயில் திருப்பணி வகைக்கும் நிரம்பக் கொடுத்து அடியார் களுக்கும் செலவிட்டு அத்திருப் பெருந்துறையிலே இருந்து அவா என்பது இன்றி இவ்வாறு செல்லும் நாட்களைக் கழிப்பாராயினுர்.

## வாதவூரர் அரசன் ஓலையைக் கண்டு இறைவனைத் துதித்தல்

எல்லைகூறிய ஆடிமாதம் வந்தது; பாண்டியன், "இன்னும் குதிரைகள் வந்தில; இஃது என்ன?" என்று ஓலை வரைந்து வாதவூரராகிய அமைச்சரின் திருமுன்னர்ச் செல்ல விடுத்தான். பாண்டியனுடைய திருமுகத்தைக் கண்டு வாதவூர் அண்ணல் முறைப்படி வாங்கி வாசித்து, "இனிச் செய்யும் வழி வேறு என்னை?" என்று கருதிநின்று சிறிதே வருந்தினார்; இறகு[1] உள்ளமாகிய விளைநிலத்துள் அன்பாகிய முளை வளரப் பாசமாகிய களையினை வேரறக் களைந்து, திரு அருளாகிய நீரினைப் பாய்ச்சித் தோற்றமும் இறுதியும் இல்லாத சிவானந்தமாகிய விளைவினைப் புசிக்குமாறு தந்தருளிய குரவனாகிய உழவனது திருக்கோயிலை அடைந்தார்.

சிந்தை யாகிய செறுவினுட் சிவமுதல் ஓங்கப்
பந்த பாசம்வே ரறக்களைந்(து) அருட்புனல் பாய்ச்சி
அந்தம் ஆதியின் றாகிய ஆனந்த போகம்
தந்த தேசிக வுழவன்றன் கோயிலைச் சார்ந்தார்.

இறைவன் திருமுன் வணங்கி நின்று, "எனது தலைவனே! தேவர்கள் சிங்கவேறே! இடபத்தைக் கொடியின்கண் உயர்த்தருளிய அரசே! சுந்தரபாண்டியனே! திருப்பெருந்துறையில் எழுந்தருளிய என் அருமை மணியே! பாண்டியன் தந்த பொருளை எல்லாம் நின் அடியார் திறத்திலும் செலவிடும் நெறியினைத் தந்தருளினீர்! இனி அடியேன் பாண்டியனுக்கு எதனைக் கொண்டு குதிரை வாங்கிக் கொடுப்பது?" என்று குறையிரந்து துதித்து வேண்டினார்.

## திருப்பெருந்துறையில் இறைவரின் வானொலி

திருப்பெருந்துறையில் எழுந்தருளிய சிவபெருமான் அசரீரி வாக்கால், "பாண்டியனுக்குக் குதிரைகளெல்லாம் வரும் என்று எழுதி ஓலை அனுப்புதி" என்று அருளிச் செய்தார். மாணிக்கவாசகர் அதனைக் கேட்டு மிக மகிழ்ந்து அவ்வண்ணமே அரசனுக்குத் திருமுகம் எழுதி அனுப்பினார். அத் திருமுகத்து எழுதிய வாசகத்தைப்

---

1. இங்கே, "மெய்ம்மையாம் உழவைச் செய்து விருப்பெனும் வித்தை வித்திப், பொய்ம்மையாங் களையை வாங்கிப் பொறையெனும் நீரைப் பாய்ச்சித், தம்மையும் நோக்கிக் கண்டு தகவெனும் வேலியிட்டுச், செம்மையுள் நிற்ப ராகில் சிவகதி விளையு மன்றே" என வரும் திருநாவுக்கரசர் தேவாரம் சிந்திக்கற்பாலது.

பாண்டியன் வாசிக்கக் கேட்டு அடங்கா மகிழ்ச்சியுடையவனாய்க் குதிரையின் வரவினை எதிர்நோக்கி இருந்தான்.

கதிரவன் மறைந்தனன். கதிரவனால் வெப்பமடைந்த நிலவுல கத்தினைத் தன் வெண்கதிரால் ஆற்றுபவனைப்போலச் சந்திரன் கீழ்த் திசையில் வந்து தோன்றினான். அன்று இரவு துயில்கின்ற மாணிக்கவாசகரின் கனவில் சோமசுந்தரக் கடவுள் குருந்தமரத்தடி யின் கீழ் ஆட்கொண்ட ஆசிரியக் கோலங் காட்டி எழுந்தருளியி "வேந்தனின் மனத்தைக் கவரத்தக்க வெற்றியைத் தரத்தக்க குதிரைகளை வாங்கிக் கொண்டு வருவேம்; இன்று நீ முன்னே செல்லுதி" என்று அருளிச்செய்தார். உடனே மாணிக்கவாசகர் நித்திரை விட்டெழுந்து, "தேவர்களுக்குக் கனவிலும் காண்டற்கரிய எம்பெருமானுடைய அருளுருவம் நமக்குக் கனவிலும் நனவிலும் எளிதாயிற்றே!" என்று நினைத்துக்கொண்டிருந்தார். வாதவூ ரடிகளது உள்ளத்தின்கண் செறிந்த ஆணவமலமாகிய இருளை இறைவன் என்னும் ஞானசூரியன் தின்று எழுந்தாற் போல இருள் நீங்கச் சூரியன் தோன்றினான்.

வாதவூரர் பாண்டியன் அவையினை அடைதல்

அப்போது இனிப் பிறவிக் கடலில் அழுந்தாதவராகிய மாணிக்க வாசகர் எழுந்து தம்மை ஆட்கொண்டருளிய திருப்பெருந்துறையில் வீற்றிருக்கும் சிவபெருமானுடைய திருவடிகளை வணங்கிக்கொண்டு அவ்விடத்தினின்றும் நீங்கி அனேக காத வழிகளைக் கடந்து மதுரையைச் சார்ந்து, பாண்டியனுடைய அரண்மனையை அடைந் தார்; அரசனைக் கண்டு முறைப்படி வழிபாடு செய்து அவன் முன்னே நின்றார். அரசன், "எவ்வளவு செம்பொன் கொண்டு போய் எவ்வளவு குதிரைகள் வாங்கினீர்!" என்று வினவினான். அதனைக் கேட்ட மாணிக்கவாசகர், "அரசே! எடுத்துச் சென்ற பொன்னும் அளவில்லை; வாங்கின குதிரைகளும் அளவில்லை; அக் குதிரைகள் பின்னே வந்துகொண்டிருக்கின்றன; கண்டருள்வாய்; இதனாலே தாங்கள், 'துரங்கபதி' என்னும் பெயரைப் பெற்று விளங்குவீர்" என்றார். பாண்டியன் வளமிக்க பலவரிசைகள் நல்கி வாதவூரரை மாளிகைக்கு அனுப்பினான்.

---

1. இங்கு, இன்னும் இறைவர் அரசனுக்குக் கையுறையாக ஒரு மாணிக்கத்தையும் அளித்துச் செல்ல விடை தந்தார் என்று வாதவூரடிகள் புராணம் கூறுகிறது.